ஊர்கூடி தேரிழுப்போம்...

# நாங்கள்

ஒற்றுமையே எங்கள் பலம்...

இதழ் 4
வைகாசி 1-31
2021

பிரதம ஆசிரியர்
க.பரணீதரன்
இணைஆசிரியர்கள்
வெ. துஷ்யந்தன்
செ. கணேசன்

அல்வாய் மனோகராக் கிராம ஆவணப்படுத்தல் மாதாந்த பத்திரிகை 30/-

அன்பான எம்மவர்களுக்கு வணக்கம்...

நாங்கள் - 4 ஆவது இதழ் வாயிலாக வாசகர்களைச் சந்திப்பதையிட்டு மகிழ்ச்சி. இந்த மாதம் எமது கிராமத்துக்கு துயரமான மாதமாகும்; "கறுப்பு வைகாசி" என்று கூடக் கூறிக் கொள்ளலாம். எமது மக்கள் உயிர்ப்பாதுகாப்பு வேண்டி அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தஞ்சம் அடைந்திருந்த போது எறிகணை வீச்சில் பலர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் இருந்தனர். இந்த வருடத்தோடு 34 ஆண்டுகள் கடந்து விட்டபோதிலும் அவர்களது இழப்பின் துயர் எங்கள் மனதில் இருந்து இன்னமும் விடுபடவில்லை; எதிர் காலத்திலும் இந்த துயர் எம்மை விட்டு அகலாது. குறித்த 29.5.1987 இலும் குறித்த மாதத்தில் போரால் மரணித்த எம்மவர்கள் அனைவரதும் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொண்டு அவர்கள் தம் குடும்பத்தினருக்கு மன ஆறுதல் வேண்டி இறைவனை நாங்கள் பிரார்த்திக்கின்றோம். இந்த இதழில் குறித்த மாதத்தில் போரால் மரணித்த எம்மவர்கள் பற்றிய குறிப்புகள் இடம்பெறுகின்றன. முடிந்தளவு முயன்று அவற்றை பதிவு செய்துள்ளோம்.

நாங்கள் பத்திரிகை நம்மவர்கள் அனைவருக்குமான பத்திரிகை அதை சரியான வகையில் பயன்படுத்தி நம்மவர்கள் அனைவரையும் ஆவணப்படுத்த வேண்டியது நம் ஊரவர்கள் அனைவரினதும் கடமை என்பதை மீளவும் வலியுறுத்திக் கொள்கின்றோம். மேலும் எவ்வளவோ நேரப்பளுவுக்கு மத்தியில் தான் எமது ஊரவர்களுக்காக எந்த வித சுய இலபாமும் இன்றி எமது பல நாட்களை செலவழித்து தன்னார்வ சேவையாகத்தான் இந்தப் பத்திரிகை வெளியிடப் படுகின்றது. எனவே இந்த பத்திரிகையை எமது ஊரவர்கள் அனைவரும் வாங்கி வாசிக்க வேண்டும். இது நம்மவர் வரலாறு என்பதை மறந்து விடாதீர்கள். இதில் நாம் அனைவரும் இடம்பெறப்போகிறோம். ஒற்றுமையே உயர்வு தரும்.

- க. பரணீதரன்

**அன்பினால் உலகை வெல்வோம்...**

உள்ளே...

1. எமது கிராமத்தின் முதல் M.B.B.S. டாக்டர்
டாக்டர் இராசசிங்கம் சாம்பசிவம்

2. 1990களில் எமது கிராமமும் சினிமாவும்
ஒரு நினைவுப்பகிர்வு

3. குறிச்சி – 2 – உதிரையடி

4. ஆர்மோனியக் கலைஞர் கலைப்போதனாச்சுடர்
அமரர் முருகர் பொன்னையா

5. இலங்கை வரலாற்றில் முதன்முதலாக மின்னொளியில்
மென்பந்து துடுப்பாட்டம்

6. அஞ்சலி
சிவஸ்ரீ சோமஸ்கந்தராஜக் குருக்கள்
புஷ்பராணி பாலசண்முகம்
சரஸ்வதி பாலசண்முகம்

7. 1987 வைகாசியில் போரால் மரணித்த
நம்மவர்கள் பதிவுகள்


8. அது ஒருகாலம் – 4
தெண்டல் கிட்டியும் பொன்னுத்துரை ஜெயநாதனும்

9. ஆலடியானும் ஆலமரமும்

10. மீள் பிரசுர நம்மவர் கவிதைகள்
தமிழ்மோகன் யோகேஸ்வரன் (தமிழ்யோகி)
சு.குணேஸ்வரன்(துவாரகன்)
அல்வைத் தணி உமா
க.தர்மதேவன்

11.மற்றும் பல செய்திகள்...

தொடர்புகளுக்கு:
கலைஅகம்,
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் வீதி
அல்வாய்.
தொலைபேசி : 0775991949
email - jeevanathy@yahoo.com



# எமது கிராமத்தின் முதல் M.B.B.S. டாக்டர் டாக்டர் இராசசிங்கம் சாம்பசிவம்

■ செல்வராசா அட்ஜெயலிங்கம் (ஆசிரியர்)

*"பிறருக்கு வேதனை கொடுக்காதவனே சான்றோன்"*
(Dr. நினைவுமலரில் M.S.S அவர்கள்) – காடினில் நியுமன்–

*என்னுடைய மாமா அவர்களைப் பற்றிய ஒரு வரலாற்றுக் குறிப்பினை எழுதித் தருமாறு தம்பி பரணீதரன் அவர்கள் என்னைக் கேட்டிருந்தார். அவருடைய வெளியீடுகள் மிகவும் காத்திரமானவை என்பதனால் சரியான தகவல்களை வழங்க வேண்டும் என்ற நோக்கில் தம்பி பரணீதரன் அவர்களிற்கு மனதிற்குள் நன்றிகளினைத் தெரிவித்து விட்டு எழுதலாம் என ஆயத்தம் செய்தேன். அப்போதுதான் நான் ஒன்றை உணர்ந்தேன் எம் மூதாதையர்களோ அல்லது எமது பெற்றோர்களோ அல்லது எமது குடும்ப உறுப்பினர்களோ எமது குடும்பத்தில் வாழ்ந்து மறைந்தவர்களுடைய வரலாறுகளைச் சொல்லிச் சென்றது கிடையாது. எமது ஊரில் வாழும் மக்களும் வெளியிடங்களில் பழகிய மனிதர்களும் வாய்மொழி மூலமாக கூறியவையும் இவர்களால் தடம் பதிக்கப்பட்ட தளங்களும் இவர்களினுடைய வரலாற்றினைப் பெருமைப்படுத்தும் போது தான் இவற்றைத் தேட வேண்டும் என்ற ஆர்வம் எம்முள்ளே ஊற்றெடுக் கின்றது. அந்தவகையில் எமது சமூகத்தின் ஓர் அடையாளமாய்த் திகழ்ந்த அமரர் டாக்டர் இராசசிங்கம் சாம்பசிவம் M.B.B.S(cey) (Dr.Rasasingam Sambasivam M.B.B.S(cey)) அவர்களின் வாழ்வியல் தடங்களை வாழுகின்ற சமூகமும் வரப் போகின்ற சமூகமும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற உயர் நோக்கில் "நாங்கள்" பத்திரிகைக்காக எமது மாமா அவர்களைப் பற்றி தேடுவதற்கு சந்தர்ப்பம் தந்த தம்பி பரணீதரன் அவர்களிற்கு மீண்டும் எனது நன்றி களினைத் தெரிவித்துக் கொண்டு அத்தோடு தகவல்களைத் தந்துதவிய உறவுகளிற்கும் எனது மனமார்ந்த நன்றிகள். இவ்வரலாற்றுக் குறிப்புக்கள் முதல் வெளியீட்டில் வர வேண்டும் என ஆசிரியர் மிகவும் விருப்பம் கொண்டிருந்தார். எனது காலதாமதத்தினால்தான் நான்காவது வெளி யீட்டில் இவை பிரசுரமாகின்றது என்பதனை அறியத் தருகின்றேன்.*

> "பொலிந்து எழும்பிய தோற்றம், புன்முறுவல் பூத்த வதனம், பொன்னிற மேனி, கருணையின் சின்னமாக ஒளிரும் கண்கள், பரந்த வெண்ணீறு பரப்பிய நெற்றி, குறைபாடுகளை கூர்ந்து கேட்கும் முகிழனைய செவிகள், முழந்தாள் வரை நீண்டு அண்டினோரை அரவணைக்கும் அன்புக் கரங்கள், பண்புள்ள இதயத்தை அகத்தே கொண்ட பரந்த மார்பு, பூரணைச் சந்திரன் போன்ற தண்ணழியும், பார்க்கடலிற் கிழக்கே உதயமாகும் பானுவின் ஒளியும் ஒருங்கமைந்த டாக்டர் எங்கள் சாம்பசிவம் அவர்கள்"
>
> - Dr. நினைவு மலரில் க.மு.முருகேசு ஆசிரியர் அவர்கள்

*ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளிற்கு முன் எமது கிராமம். ஒற்றையடிப் பாதைகளும் பெரிய மணல் தெருக்களும் பனையோலை வாசம் நிறைந்த வேலிகளும் வீடுகளும் பனஞ்சோலைகளும் அன்பு நிறைந்த அரவணைக்கும் உறவுகளையும் கொண்ட ஒரு அழகான கிராமம் தான் எமது அல்வாய் தெற்கு. ஐம்பது ஆண்டுகள் என்று சொல்லப்படுவது எனது விபரம் தெரிந்த பருவ நிலைகளை உள்ளடக்கிய காலம் அது. எனக்குத் தெரிந்த இப்படியான ஒரு கிராமம் நூறு ஆண்டுகளிற்கு முன் சமூகப் பாகு பாடுகள் நிறைந்த காலத்தில் எப்படி இருந்திருக்கும் என்று நீங்களே நினைத்துப் பாருங்கள்.*

*அந்தக் காலத்தில் வாழ்ந்த செல்வச் செழிப்பு மிக்க கிளானைக் குடும்பத்தில் இராசசிங்கம் கதிராசி தம்பதியினருக்கு கனிஸ்ர புதல்வ னாக பிறந்தவர்தான் அமரர் Dr.சாம்பசிவம் அவர்கள். இவர் **1938**ஆம் ஆண்டு வைகாசி மாதம் **24**ஆம் திகதி பிறந்தார். இவர் உடன் பிறந்தோர் அமரர் சைவப்புலவர், ஆசிரிய ஆலோசகர் மற்றும் அதிபர் ஆகிய இராசசிங்கம் செல்லத்துரை (RS) அவர்களும் அமரர் சரஸ்வதி செல்வராசா அவர்களும் ஆவார்கள். இவர் தனது சொந்த மைத்துனி ஆகிய தம்பிப்பிள்ளை மீனாட்சியம்மா அவர்களை திருமணம் புரிந்தார்.*

*இவர்தனது ஆரம்பக்கல்வியை யா/வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை யிலும் தொடர்ந்து யா/தேவரை யாளி இந்துக் கல்லூரியிலும் தொடர்ந்து இடைநிலைக் கல்வி யினை ஹாட்லிக் கல்லூரியிலும் உயர் கல்வியினை யா/பரியோவான் கல்லூரியிலும் (St.John's College) தனது கல்விப் பயணத்தைத் தொடர்ந்தார். எமது சமூகத்திற்கு எட்டாக் கனியாக இருந்த மருத்து வத்துறை என்ற இமயத்தைத் தொட வேண்டும் என்ற வைராக்கியத் துடன் தனது உயர்தரப் பெறு பேற்றின் மூலம் கண்டிப் பேரா தனைப் பல்கலைக்கழகத்திற்கு*

உள்வாரி மாணவனாக தெரிவு செய்யப்பட்டு M.B.B.S(cey) என்ற உயரிய பட்டத்தினைப் பெற்று எமது சமூகத்தின் முதலாவது வைத்தியரானார். இத்துறையில் இவர் உயர்வதற்கு அமரருடைய தாய்மாமனார் பெ.சபாபதிப்பிள்ளை அவர்களும் சகோதரன் இ.செல்லத்துரை அவர்களும் பேருதவி புரிந்தார்கள். இந்த உயர் நிலையை அடைந்ததற்காக எமது பால கணபதிக்கு உயர்மணிக் கோபுரம் ஒன்றினை அமரரின் சகோதரர் தங்கள் பெற்றோரான இராச சிங்கம் கதிராசி நினைவாக உபயம் செய்தார்கள்.

இவருடைய இளமைக் காலத்தில் இவர் ஒரு சிறந்த உதைபந்தாட்ட வீரனாகவும் சிறந்த கரப் பந்தாட்ட வீரனாகவும் திகழ்ந்து மனோகராவின் பல வெற்றிகளிற்கு பக்கபலமாக இருந்தவர். இவருடைய விளையாடும் பக்குவம் பற்றி இன்றும் பலர் பெருமை யாகப் பேசிக் கொள்வதை எம் காதுகளால் கேட் கின்றோம். கல்லூரி வாழ்க்கையிலும் பல்கலைக்கழக வாழ்க்கையிலும் உதைபந்தாட்டம் கரப்பந்தாட்டத் துடன் மேசைப்பந்து, கூடைப்பந்து போன்ற விளை யாட்டுக்களிலும் பங்கு கொண்டு பல சாதனைகளைப் புரிந்தார். சென் ஜோன்ஸ் கல்லூரியில் மாணவ முதல்வ ராக இருந்து தன்னுடைய பெயரை நிலைநாட்டியவர். இவ்விடத்தில் ஒரு முக்கியமான செய்தியினைச் சொல்லிச் செல்ல வேண்டும். எமது மைத்துனராகிய விரிவுரையாளர் திரு.சடையர் நாகேந்திரன் அவர்கள் ஹாட்லிக் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் உயர்தர பிரிவில் கலைத்துறையை தெரிவு செய்த போது அவருடைய பாடத் தெரிவு காரணமாக அவரை தட்டிக் கழிக்க வேண்டும் என்ற நோக்கில் அவருடைய உரிமை அங்கே மறுக்கப்பட்டது. இதன் போது எனது தந்தை யார் ஆசிரியர் செல்வராசா அவர்கள் அப்போதைய அதிபர் பூரணம்பிள்ளை அவர்களுடன் கதைத்து அவரை பாடசாலையை மாற்றுவதற்கான அனுமதி யினைப் பெற்றார். இவரை இந்துப்பாம்பரியத்தைப் பேணும் முகமாக யா/இந்துக் கல்லூரியில் சேர்வதற் கான அனுமதியைப் பெற்றிருந்தார்கள். இவரை கல்லூரியில் சேர்க்கும் முகமாக எமது ஊரின் வழி காட்டியான கவிஞர் செல்லையா அவர்களுடன் உயர்திரு இராஜலிங்கம் (Member of Parliament) அவர்களும் பாடசாலைக்கு அழைத்துச் சென்றனர். அங்கே கவிஞர் அவர்களால் நாங்கள் யார் என்றும் நாங்கள் இந்துப் பாரம்பரியத்தில் வளரவேண்டும் என்பதனையும் முன்னிலைப்படுத்தி தங்களைப் பற்றி Hindu Board இராஜ ரட்ணம் அவர்களிடம் கூறியிருந் தார்கள். இதனைக் கேட்ட சைவத்தை வளர்த்த இராஜ ரட்ணம் அவர்கள் உடனடியாக இவருடைய அனுமதிப் பத்திரத்தினைக் கிழித்தெறிந்து இவர்களை வெளியே போகும்படி உத்தரவிட்டார். அவர் கூறிய ஒரு முக்கிய மான வார்த்தை "எங்கள் கல்லூரியை எரிப்பதற்கு ஒரு தீக்குச்சி போதும்" இந்த வார்த்தையுடன் அவர்கள் வெளியே வந்து இராஜலிங்கம் அவர்களின் வழி காட்டலில் அதே நாள் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கு சென்று பாடசாலையில் கற்பதற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டனர். இதனைத் தொடர்ந்தே Dr.சாம்பசிவத்திற்கும் விஞ்ஞானதுறையில் உயர் தரத்தை கற்பதற்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் அவரும் சென் ஜோன்ஸ் கல்லூரியினைத் தெரிவு செய்து தன்னுடைய உயர் கல்வியினைத் தொடர்ந்தார்.

தனது பல்கலைக்கழக பட்டப்படிப்பினை நிறைவு செய்த டாக்டர் அவர்கள் தனது முதல் நிய மனத்தினை அனுராதபுரம் அரச வைத்தியசாலையிலும் பின்னர் நெடுந்தீவு அரச வைத்தியசாலையிலும் அதன் பின்னர் திருகோணமலை அரச வைத்தியசாலையிலும் தொடர்ந்து யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை யிலும் தனது பணியைத் தொடர்ந்தார். தன்னுடைய பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கும் காலத்தில் **1973**ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் **25**ஆம் திகதி யாருமே எதிர்பாரா வண்ணம் யேசுபாலன் பிறந்த நாளில் இவ்வுலக வாழ்க்கையை நீத்தார்.

இவருடைய குண இயல்புகளை வைத்துத்தான் அமரர் அவர்களைப் பற்றி அதிபர் MSS அவர்களும் ஆசான் முருகேசு அவர்களும் தங்களுடைய மன வெளிப் பாட்டை அவ்வாறு வெளிப்படுத்தியிருந்தார்கள் என்றால் அவை மறுப்பதற்கில்லை. தொழில்கள் சிலரை மட்டுமே அடையாளப்படுத்தும். அந்த வகையில் எமது பிரதேசத்தின் வரலாற்று நாயகனாக வாழ்ந்த சாம்பசிவம் அவர்கள் டாக்டர் என்ற பெயருக்கு இலக்கணமானார்.

"உன்னுடைய பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம்–ஆனால்
உனது இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்"

என்ற அப்துல்கலாம் அவர்களுடைய பொன் மொழியை அன்றே நிரூபித்து இன்றும் மக்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டு இருப்பவர் தான் Dr.இராசசிங்கம் சாம்பசிவம் அவர்கள்.


இவரை கௌரவப்படுத்தும் முகமாக எமது மனோகரா சனசமூக நிலையமானது இவருடைய பெயரில் சாம்பசிவம் என்ற பச்சை இல்லத்தினையும், மனோகரா சனசமூக நிலையத்தில் அவருடைய திரு வுருவப் படத்தினையும் அடையாளப்படுத்தியமை அவர் மீது எம்மக்கள் கொண்டிருந்த உயர் அன்பின் வெளிப் பாடு எனலாம். "எவ்வளவு காலம் வாழ்ந்தோம் என்பது சாதனை அல்ல எப்படி வாழ்ந்தோம் என்பதே சாதனை" என்பதற்கமைய ஒரு தலைமுறை கடந்து அடுத்த தலை முறையில் நாங்கள் பத்திரிகையில் பேசப்படுவது இவரின் வாழ்வியல் தடத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாகும். ✦

---

விசிந்தன் சரண்யா தம்பதியினருக்கு 2021.05.04 அன்று கேதாரினி என்னும் மகள் பிறந்துள்ளார். எமது ஊருக்கு புதியதொரு அங்கத்தவர் இணைந்து கொள்கிறார்.

பரணீதரன் விஷ்ணுவர்த்தனி தம்பதியினருக்கு 2021.05.21 அன்று சச்சின் என்னும் மகன் பிறந்துள்ளார். எமது ஊருக்கு புதியதொரு அங்கத்தவர் இணைந்து கொள்கிறார்.

கீர்த்திகன் ஜெனோவா தம்பதியினருக்கு 2021.05.26 அன்று நிக்சித் என்னும் மகன் பிறந்துள்ளார். எமது ஊருக்கு புதியதொரு அங்கத்தவர் இணைந்து கொள்கிறார்.




காலம் எப்போதும் ஒரு விசித்திரமானது என்பர். அக்காலம் பல இனிய நினைவுகளை உள்ளிருத்தியும் நினைவுபடுத்தியும் நகர்ந்து கொண்டேயிருக்கும். இந்தத் தொடர்வெளியில் எமது அல்வாய் மனோகரா கிராமத்தை பொறுத்தவரை ஏராளமான விடயங்கள் எழுத்தில் பதிய வேண்டியுள்ளது. அவை ஆவணத்திற்கானவை என்று சொன்னாலும் உண்மையிலும் அந்த பொற்கால வாழ்வியலை சமகால தலைமுறை அறிந்து கொள்ள வேண்டியது கட்டாயமானது.

போரியல் வாழ்க்கை முறை எமது வாழ்வியலில் பல்வேறு மாற்றங்களை உண்டுபண்ணியது உண்மையில் நெருக்கடியான காலவெளிகளிலும் நாங்கள் வாழ்ந்த வாழ்வியல் என்பது அதி உன்னதமானது. 1990களின் நடுப்பகுதியில் மின்சாரம் இல்லாத அந்த காலவெளியில் எங்கள் கிராம மக்கள் தங்கள் சினிமா திரைப்பட பார்வை ஆசையை எப்படி நிவர்த்தி செய்தார்கள். அவற்றிற்கு எமது மக்களிடம் என்ன வாய்ப்புகள் இருந்தன என்பனவற்றை முன்வைத்து நினைவில் நிழலாடும் சில விடயங்களை முன்வைத்து இந்தப் பிரதி நகரவிருக்கின்றது.

இன்று நவீன காலத்தில் முதல் காட்சியில் முதல்நாளில் தியேட்டர்களில் சினிமா பார்ப்பதை பெரிய விடயமாகக் கொண்டிருக்கும் இந்த காலத்தில் எங்கள் கிராமத்திலும் மிக முக்கியமான மினிசினிமாக்கள் அந்நாளில் இருந்து அநேக மக்களின் திரைத்தாகத்தை நிவர்த்தி செய்தன. அவற்றில் பிரதானமான ஒன்றாக விளங்கியது க.தர்மகுலசிங்கம் அவர்களின் "குமரன் மினி சினி" ஆகும். அந்நாளில் மிகப்பிரபல்யம் வாய்ந்ததாக காணப்பட்ட இந்த மினிசினி இப்போதைய கவிஞர் செல்லையா வீதி என பெயரிடப்பட்டிருக்கும் பெயர் பலகைக்கு பின்னால் உள்ள கடைத் தொகுதியில் பலகாலம் சிறப்பாக இயங்கியது. பெயர் சொல்லக்கூடிய பல திரைப்படங்கள் இங்கு காண்பிக்கப்பட்டன. குமரன் மினிசினி காலப்போக்கில் தன்னை "குமரன் வீடியோ"வாக மாற்றிக் கொண்டு திரைப்பட கசட்டுகளை வாடகைக்கு வழங்குகின்ற நிறுவனமாக மருவியது. இந்த ஸ்தாபனத்தின் மூலமாக பல அயற்கிராம மக்கள் பலரும் கசெற் கொப்பிகளை வாடகைக்கு பெற்று திரைப்படங்களை கண்ணுற்றனர்.

இதற்குப் பின் உண்மையில் மறந்துவிட முடியாத நாமமாய் "ஜெகா மினி சினி" தோற்றம் பெற்றது. திரு வே.ஜெகதீஸ்வரன்(வேலுக்குட்டி) அவர்களால் இயக்கப்பட்ட இந்த ஜெகா மினிசினி "காதல் புத்தகம்" என்னும் திரைப்படத்தை முதலாவதாக காண்பித்ததாய் ஒரு ஞாபகம் இருக்கின்றது. வேலுக்குட்டி அவர்களின் ஜெகா மினிசினி ஒரு நகரும் இயந்திர மினிசினியாக எங்கள் கிராமத்தின் அநேக வீடுகளிலும் இயங்கியது. எமது வாசிகசாலைக்கு பக்கமாக ஒரு கரும்பலகையில் இரவுத் திரைப்படத்தின் விளம்பரம் எழுதப்பட்டிருக்கும். இதனை கண்ணுற்ற இளையவர்கள் அநேகரும் பின்னேர நித்திரையை வலுக்கட்டாயமாக கொள்கின்ற தன்மை அந்நாளில் காணப்பட்டது. நாட்டாமை, சூரியவம்சம், எஜமான் போன்ற பல திரைப்படங்கள் ஜெகா மினிசினியால் பலவிடங்களில் காண்பிக்கப்பட்டது. திரைப்படத்திற்கு முன்னரான அன்றைய நாளில் "சோட்ஸ்" என்று சொல்லப்பட்ட திரைப்பட பாடல்கள் காண்பிப்பு பல நேரங்களில் காண்பிக்கப்பட்டது. ரீவி, டெக், இன்ஜின் போன்றன அந்நாளில் செய்யும் குழப்படிகளுக்கு மத்தியில் ஒரு திரைப்படத்தை பார்த்து முடிப்பது என்பது பெரிய விடயமாக காணப்பட்டது.

இதே சமகாலத்தில் தான் மரக்காலை என்று எம்மால் அழைக்கப்படுகின்ற இடத்தில் பிரமாண்டமாக பல காலம் இயங்கியது "செந்தில் மினி சினிமா" ஆகும். ச.செந்தில் அவர்களால் இயக்கப்பட்ட இந்த சினிமா கொட்டகை உண்மையில் கிராமங்கள் தாண்டியும் பல மக்களின் சினிமா திரைப்பட பசியை போக்கியது எனலாம். "அருணாசலம்" திரைப்படம் வெளியான போது எமது கிராம இளையோர் பலரும் இந்தப்படத்தை அங்கு பார்வையிடச் சென்றபோது அந் நாளில் அல்லும் பகலும் இடம்பெற்ற ரவுண்டப் சுற்றி வளைப்பில் மாட்டிக் கொண்ட வரலாறுகளும் இருந்திருக்கின்றன.

எங்கள் கிராமத்தை பொறுத்தவரை இச்சமகாலத்தில் வீடுகளில் யாரினதும் பிறந்தநாள், திருமண பூப்புனித நீராட்டு வீடியோ கசட்டுக்கள் பார்ப்பதாயின் அவற்றோடு சேர்த்து விடிய விடிய ஒரு நான்கு திரைப்படமாவது காண்பிக்கப்படுகின்ற கட்டாய வழக்கம் இருந்தது. இந்த செயற்பாடு எங்கள் ஊரின் அநேக வீடுகளில் இருந்தது.

ஒரு வீட்டில் ரீவி இருப்பதே பெரிய விடயமாக பார்க்கப்பட்ட அந்நாளில் ஜெனரேட்டர், ரீவி, டெக் உள்ளிட்ட சாதனங்கள் உள்ள வீடுகள் எப்போதும் இரசிகர்களால் நிறைந்தே காணப்பட்டது. இந்த நீட்சியில் பல வீடுகள் இருந்தாலும் ஒரு வீட்டை குறிப்பிட்டே ஆக வேண்டும் அதுதான் மாவடிச் சோலை பாலதரன், சிவகரன் அவர்களின் வீடு ஆகும். எப்போது பார்த்

தாலும் இந்த வீட்டில் இளையோர் குவிந்தே காணப்படுவர். பாட்ஷா திரைப்படம் ஆனது இவர்களது வீட்டில் மாத்திரமே ஒரு நூறு தடவைக்கு மேலாக காண்பிக்கப் பட்டிருக்கும். அந்தளவிற்கு இந்த வீட்டிற்கும் திரைப்படங்கள் பல வற்றிற்கும் மிகுந்த தொடர்புண்டு.

*1996* ஆம்ஆண்டு வில்ஸ் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரையும் இந்த வீட்டையும் மறக்க முடியாது. சைக்கிள் டைன மோவில் ஒரு சிறிய பிளக் அன்ட் வைற் ரீவியில் எமது கிராம இளைஞர்கள் பலரும் இங்குதான் கூடுதலாக பார்வையிட்டனர். டைனமோ இயக்கத்திற்காக சைக்கிளை மேலிருந்து உழக்குபவர் ஒவ்வொரு ஓவர் முடிவிலும் சிறு ஓய் வெடுக்கின்ற தன்மை இப்போதும் நினைவில் வருகின்றது.

காலஓட்ட நகர்வில் சிறப் பாக திரைப்படங்கள் காண்பிக்கப் பட்டன. இதில் மூன்றாம் பனையடி வெட்டையில் விடிய விடிய பெரிய திரையில் படங்கள் காண்பிக்கப் பட்டன. பாண்டியன், ஒன்ஸ்மோர் போன்ற திரைப்படங்கள் இங்கும் அடுத்து இப் போதைய திருதிருமதி சோதீஸ்வரா ராதா குடும்பத்தினரின் இல்லமிருக்கம் வெட்டையிலும் பல திரைப்படங்கள் காண்பிக்கப் பட்டன. இங்கு அவள் வருவாளா, என் ஆசை ராசாவே, ஊர்க்காவலன் போன்ற பல திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டன.

உண்மையில் ஏலவே குறிப் பிட்டது போல எங்கள் கிராமம் சார்ந்த ஒவ்வொன்றுமே எழுதப்பட வேண்டியதானது அவற்றில் 90 களின் நடுப்பகுதியிலான எமது கிராம மக்களும் சினிமாவும் உண்மை யிலேயே இரண்டறக் கலந்த இன்ப நினைவாக இன்றைக்கும் எங்கள் நெஞ்சங்களில் மாறா நினைவுகளாக தவழ்கின்றன. எனது நினைவுக்கு எட்டிய வகையில் சிலவற்றை மீள பிரதியாக்கம் செய்திருக்கின்றேன். விடுபட்டவையையும் சேர்க்கப்பட வேண்டியவற்றையும் தொடர்ச்சி யாக எழுத வேண்டும் என்ற எண்ண அவாவில் இத்தோடு நிறைவு செய்கின்றேன்.

## குறிச்சி - 2

# உதிரையடி

செல்லக்குட்டி கணேசன்

இக்குறிச்சியானது மந்தடி குறிச்சியில் இருந்து நேர்கிழக்காக எழுபது மீற்றர் தூரத்தில் அமைந் திருந்தது. இக்குறிச்சியின் முன் பக்கம் வெற்று நிலப்பரப்பாக இருந்தது. இவ்விடமே தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவர்களின் விளையாட்டு பயிற்சி மைதானமாகவும் அவ் இடத்தைச் சூழவுள்ள சிறுவர்களின் விளையாட்டு “வெட்டை” யாகவும் இருந்தது. இவ்வெட்டையை நாங்கள் உதிரையடி வெட்டை என்றே அழைப்போம். இவ்வெட்டை அருகே வாழ்ந்து வந்தவர்கள் தான் திரு.திருமதி ஆறுமுகம் சின்னப்பிள்ளை தம்பதியினர். இத்தம்பதியினரே அக்குறிச்சியில் வாழ்ந்த முதல் தம்பதியினர் என்று அறியப்படுகின்றது. இத்தம்பதியினர் இல்லற வாழ்வின் பயனாக மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்தனர். அவர்கள் முறையே ஆ.நாகராசா, ஆ.நாகேஸ்வரி, ஆ.நகுலேஸ்வரி ஆவார். அவர்களில் திரு ஆ. நாகராசா அவர்கள் கவிஞர் செல்லையா வீதி, சுட்டியர்பாதி குறிச்சியில் வாழ்ந்து வந்தவர்களான திரு திருமதி ஆறுமுகம் அன்னப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுதல்வி செல்வமணி அவர்களை திருமணம் புரிந்து அவ்விடத்திலேயே மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகளுடன் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகிறார்கள். இத் தம்பதியினரின் இளைய மகள் நகுலேஸ்வரி அவர்கள் கொற்றாவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு வீரபத்திரனை மணம் புரிந்து கவிஞர் செல்லையா வீதியில் “பிச்சாவத்தை” குறிச்சியில் புதிதாக கொள்வனவு செய்த நிலப்பரப்பில் வீடு கட்டி மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகிறார்கள். இத்தம்பதியினரின் மூத்த மகள் நாகேஸ்வரி அவர்கள் உடுப்பிட்டி ஆதியாமலையைச் சேர்ந்த திரு வ.சபாரட்ணம் (திருவோணம்) என்பவரை திருமணம் புரிந்து தாய் மனையில்(உதிரையடி) வாழ்ந்து வந்தார்கள். இவர்களின் இல்லற வாழ்வின் பயனாக 5 குழந்தை களைப் பெற்றெடுத்தனர். குழந்தைகள் வளர்ந்து வர பூவற்கரையான் வீதியில் தேவரையாளி இந்துக் கல்லூரியில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் வடக்குப் பக்கமாக உள்ள காணியை கொள்வனவு செய்து, அவ்விடத் திலேயே குடியேறினர். முறையே சாந்தகுமார், செந்தில்குமார் இருவரும் வதிரி மேற்கில் திருமணம் புரிந்து அவ்விடத்திலேயே வாழ்ந்து வருகின்றனர். சசிகுமார் வதிரி கிழக்கு கதிரான் வளவு குறிச்சியில் திரு திருமதி விஜயரட்ணம் அன்னராணி தம்பதிகளின் புதல்வியை திருமணம் புரிந்து அவ்விடத்திலேயே வாழ்ந்து வருகிறார்கள். ஏகபுதல்வி சுனித்தா வதிரி மேற்கில் திருணம் புரிந்துள்ளார். தனது தாய் மனையிலே தனது குடும்பத்துடன் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களது இளைய சகோதரன் சஞ்சீவ் குமார் தாய் மனையிலே தனது சகோதரியுடன் வாழ்ந்து வருகிறார். இவர்கள் அனைவரும் எமதுகிராமத்துடன் நெருங்கிய உறவைப் பேணுவது மகிழ்ச்சி தருகின்ற விடயமாகும்.



திரு திருமதி பாரதராசா தங்கமலர் தம்பதியினரின் புத்திரன் பிரதாப் அவர்களும் திரு திருமதி இராசதுரை தம்பதியினரின் புத்திரி தர்ஷனா அவர்களும் 16.05.2021 அன்று திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார்கள்.



# ஆர்மோனியக் கலைஞர் கலைப்போதனாச்சுடர் அமரர் முருகர் பொன்னையா

■ கணபதிப்பிள்ளை வரதவேல்

அல்வாய்க்கிராமத்தில் மயிலிட்டிக் குறிச்சியில் முருகர் குஞ்சரம் தம்பதியினருக்கு மூன்றாவது மகனாக 1909 ஆம் வருடம் பொன்னையா அவர்கள் இவ்வுலகில் பிறந்தார். இவரது உடன் பிறப்புக்கள் நால்வர். மூத்த சகோதரர்கள் வைத்திலிங்கம் மற்றும் கவிஞர் செல்லையாவும் சகோதரிகள் திருமதி தங்கரூபம் மண்டலம் மற்றும் திருமதி சின்னத் தங்கம் சிவகுரு ஆகியோர்கள். ஆரம்பக் கல்வியை தேவரையாளி சைவ வித்தியாசாலையில்(தற்போது தேவரையாளி இந்துக் கல்லூரி) கற்றதோடு கலைத்துறையிலும் மிகுந்த ஆர்வம் கொண்டமையால் பல நாடகங்களில் கதாபாத்திரங்களை ஏற்று நடித்திருந்தார். இசை மீது ஏற்பட்ட ஆர்வத்தினால் ஆர்மோனிய வாத்தியத்தினை முறையாகக் கற்றுக் கொண்டதன் பயனாக எமதூரில் மேடையேற்றப்பட்ட இசைநாடகங்கள் அனைத்திற்கும் ஆர்மோனியம் வாசித்ததோடு, பல நாடகங்களையும் நெறியாள்கை செய்து அரங்கேற்றியதுடன் பல கலைஞர்களை நாடகத் துறையில் அறிமுகப்படுத்தியிருந்தார்.

எமது ஆலயத்தில் வருடந்தோறும் சிறப்பாக நடைபெற்று வரும் மஹா சிவராத்திரி நாடக விழா என்றவுடன் ஆர்மோனிய வாத்தியத்துடன் பக்கவாத்தியக் கலைஞராக அரங்கினில் எம்முன் தோன்றுபவர் கலைப்போதனாச்சுடர் பொன்னையா அவர்கள்தான். அவருடன் இணைந்து மிருதங்கத்துடன் அரங்கை அலங்கரித்தவர்கள் வதிரிமேற்கைச் சேர்ந்த திரு சதாசிவம் அவர்களும் பிற்காலத்தில் எமதூரைச் சேர்ந்த திரு செ. செல்வராசா அவர்களும். செல்வராசாவும் இவரும் பல மேடைகளில் இசை நாடகங்களின் பக்கவாத்தியக் கலைஞர்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். கலைஞர் இ.சவலை, கவிஞர் மு. செல்லையா, அண்ணாவியார் ச. தம்பிஐயா, கலாவினோதன் பெ. அண்ணாச்சாமி ஆகியோர் நெறியாள்கை செய்த பல இசைநாடகங்களுக்கும் ஆர்மோனியம் வாசித்திருந்தார். முன்பெல்லாம் மஹாசிவராத்திரி விழாக்களுக்கோ அல்லது வேறு கலை நிகழ்வுகளுக்கோ நாடகங்களை மேடையேற்றுவதற்காக “பாரதி பவனத்தில்” அமைந்திருந்த அவரது வீட்டில் நாடகங்களை பழக்கி வருவது வழக்கமாகக் கொண்டிருந்தனர். அங்கு பவளக்கொடி, ஸ்ரீவள்ளி, பக்த நந்தனார், காத்தவராயன், அரிச்சந்திரா, சத்தியவான் சாவித்திரி என்பவற்றுடன் வேறு பல இசை நாடகங்களும் மற்றும் சமூக நாடகங்களும் பயிற்றுவிக்கப்பட்டமை நாம் அறிந்ததாகும். இவரது பெறாமகனாகிய நடிகநாதமணி மு.செ.விவேகானந்தன் நெறியாள்கை செய்த கவிஞர் நாடகமன்றத்தின் இசைநாடகங்கள், காத்தவராயன்(சிந்துநடைக்கூத்து) என்பனவற்றிக்கும் இவரே ஆர்மோனியம் வாசித்தார். நடிகநாதமணி மு.செ.விவேகானந்தன் நெறியாள்கை செய்த காத்தராயன்(சிந்துநடைக்கூத்து) யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் மேடையேற்றப்பட்டபோதும், பல நாடகப் போட்டிகளுக்குச் சென்று தங்கப்பதக்கங்களை வென்ற அரிச்சந்திரா மயான காண்டம் நாடகத்துக்கும் மற்றும் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகிய ஸ்ரீவள்ளி, காத்தவராயன் நாடகங்களுக்கும் இவரே ஆர்மோனியம் வாசித்திருந்தார். 1988 ஆம் ஆண்டு எமதூர் மக்களால் நடாத்தப்பட்ட கௌரவிப்பு விழாவில் “கலைப்போதனாச்சுடர்” பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயத்தின் முதலாவது பனருத்தாரண கும்பாபிஷேகம் 1968 ஆம் வருடம் நடைபெற்றபோது இவரே பரிபாலனசபைத் தலைவராக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். எமது கிராமத்தில் நடைபெற்ற சித்திரா பூரணை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடாத்திய அறுவர் கொண்ட குழுவில் இவரும் ஒருவராக இருந்தார். ஒலிபெருக்கிச் சாதனங்களை வைத்திருந்து வாடகைக்கு விட்டிருந்ததோடு, கார் வாகனம் ஒன்றையும் வைத்திருந்தார். அன்றைய காலத்தில் தனது வாகனத்தில் மனோகரா விளையாட்டு வீரர்கள் வல்வெட்டித்துறைக்கு சென்று விளையாடிய போது எந்தவித உபகாரமும் பெற்றுக் கொள்ளாமல் அவர்களை கூட்டிச் சென்று வந்தமை அவரின் ஊர்ப்பற்றினைக் காட்டும் ஒரு செயலாகும். மேலும் இவர் துவிச்சக்கரவண்டி பழுது பார்ப்பதில் வல்லுநராக இருந்ததோடு மட்டுமல்லாமல் தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு முன்பாக கடையொன்றை நடாத்தி வந்தார்.

இவர் இயவராந்தோட்டத்தில் வசித்த சிவப்பிள்ளை என்பவரைத் திருமணம் செய்து வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொண்டார். மேலும் ஆர்மோனிய வாத்தியத்தினை பலருக்கு முறையாகப் பழக்கி அத்துறையில் அவர்களை மேலோங்கச் செய்ததுடன், பெறாமகனாகிய மயிலு தயாமணி அவர்களை தங்களது மகனாக வளர்த்து அவருக்கு சைக்கிள் திருத்தும் தொழிலைப் பழக்கியதுடன் ஆர்மோனிய வாத்தியத்தினையும் முறையாகக் கற்பித்தார். இன்று வடமராட்சியில் சிறந்ததொரு ஆர்மோனியக் கலைஞராக தயாமணி அவர்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

எண்பத்தொரு வருடங்கள் எம்மோடு வாழ்ந்து 1990 ஆம் வருடம் இறைவனடி எய்திய கலைப்போதானச்சுடர் அவர்களை இவ் ஆவணப்படுத்தல் மாதாந்தப் பத்திரிகை மூலம் நினைவு கூர்வதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

# இலங்கை வரலாற்றில் முதன் முதலாக மின்னொளியில் மென்பந்து துடுப்பாட்டம்

■ கனகசபாபதி செல்வநேசன் ■

நொச்சியடி வெட்டை எங்களுக்கு வாழ்வியல் சொர்க்கம். அதன் புழுதியில் விழுந்து புரண்டு எழுந்த நாங்கள் என்றும் புனிதர் களே. இன்று அதன் அடையாளம் இழந்து விட்ட போதிலும் எங்கள் நினைவு களிலும் உணர்வுகளிலும் அந்த மண் வாசம் நிறைந்திருக்கிறது எங்களை உயிர்ப்போடு வாழ வைத்துக் கொண்டி ருக்கிறது. எமது ஊரின் முதன்மைக் கல்வியியலாளரும், கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியருமான கலாநிதி மா. கருணாநிதி அவர்கள் தமது சிறு பிராய நினைவுகளைப் பகிரும்போது நொச்சியடி வெட்டை யில் அவர்கள் சிறுவர்களாக விளை யாடிய காலத்தில் சி. திரவியம் ஆசிரியர் அவர்களின் சகோதரன் திருநாவுக் கரசு அவர்கள் அனைத்து சிறுவர் களையும் ஒன்று திரட்டி ஒவ்வொரு வரிடமும் ஐந்து சதம் அறவிட்டு விளையாட்டுப் போட்டி நடாத்த முன் நின்றதாகவும் இப்போட்டிக்கு மூ.நாக முத்து மற்றும் நா.சி.கந்தவனம்



ஆகியோர் அனுசரணை வழங்கிய தாகவும் குறிப்பிட்டிருந்தார். அன்று தொடக்கம் நொச்சியடி வெட்டை வருடா வருடம் விளையாட்டு நிகழ்வு களால் கலகலக்கும். இப்படியான ஒரு போட்டியின் போதுதான் கிளி வெட்டிக் குறிச்சியைச் சேர்ந்த சிவ தாசனின் மகன் தர்மசிறி தண்ணீர் எடுப்பதற்காக வந்து மூன்றாம் பனை யடிக் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து உயிரிழந்த துயரச் சம்பவமும் நடை பெற்றது. இங்கு நடைபெறும் போட்டி களில் பரிசுப் பொருட்களாக முகம் பார்க்கும் கண்ணாடி, சவர்க்காரம், சீப்பு, இறப்பர் பந்து, பிளாஸ்டிக் பந்து, முகத்துக்குப் பூசுகின்ற பவுடர் (அப்போது கந்தன் பவுடர் பிரபலம்) சவர்க்காரக் கேஸ், பவுடர் கேஸ் இப்படியான பொருட்கள் வழங்கப் படும். மென்பானங்களாக வினோ எனச் சொல்லப்படும் இனிப்புப் பாணி, வல்வெட்டித்துறை சுப்பிரமணியம் சோடா என்பன வழங்கப்படும். இவை 1960 மற்றும் 70களில் நிகழ்ந்தவை. 1983 இலங்கைத் துடுப்பாட்ட வரலாற்றில் முதன் முதலாக மின்னொளியில் ஒரு மென்பந்து துடுப்பாட்டப் போட்டியை நொச்சியடி வெட்டையில் நடாத்தி முடித்தோம். இப்போட்டி நடைபெறுவதற்கு பிரதான காரணகர்த்தாவாக விளங்கியவர் கனடாவில் வசிக்கும் நடேசு செல்வ ரத்தினம்(அரி) அவர்கள் ஆவார். வருடந் தோறும் பிள்ளையார் வெட்டையில் (மனோகரா மைதானம்) நடைபெறுகின்ற (Big Match) எனப்படும் மிகப் பெரும் துடுப்பாட்டப் போட்டியில் விளையாடும் சந்தர்ப்பம் கிடைக்காதவர்களுக்காக நடாத்தப்பட்டது தான் இந்த மின்னொளியில் துடுப்பாட்டம். இப்போட்டிக்கான தயார்ப்படுத்தல்களுடன் விளம்பரப்படுத்தலுக்கான முன்னேற்பாடுகளையும் செல்வரத்தினம் தனது பொறுப்பில் எடுத்து திட்டமிடல் குழுவினராக யுவராசா, வதிராசா, அசோகன் மற்றும் செல்வநேசன் ஆகியோரையும் இணைத்துக் கொண்டார். போட்டி தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் அவர் கடமையாற்றிய கிளி நொச்சிக் காரியாலயத்தில் போட்டோ கொப்பி எடுத்து பரவலாக விநியோகிக்கப் பட்டது. விளையாடும் அணிகள் மனோ யஸ்மின்ஸ் எதிர் மனோ ரோசஸ் என விளம்பரப்படுத்தப்பட்டது. மின் இணைப்புக்குத் தேவையான வயர்கள் ஊரி லுள்ளவர்களிடமிருந்த துண்டு வயர்கள் சேகரிக்கப்பட்டு தேவைக்கேற்ப அவை களை இணைத்து வைத்துக் கொண்டோம். பிரதான ஆளிகளும் மின் தெறிப்பு தகடுகளும் செல்வரத்தினம் தன்னிடமிருந்த பொருட்களைக் கொண்டு தயாரித் தார். போட்டிக்குத் தேவையான சக்தி வாய்ந்த மின்குமிழ்களை திரு: பொ.தர்மராசா(மணி) அவர்களின் அனுசரனையில் பெறப்பட்டது.

போட்டிக்காக மைதானம் செப்பனிடப்பட்டு சுற்றிலும் தடிகள் நாட்டப் பட்டது. மைதானத்தின் வடக்குத் தெற்குத் திசைகளில் நேரெதிரே இருந்த பனை மரங்களுக்கிடையில் ஆடுகளம் அமைக்கப்பட்டு அந்தப் பனை மரங்களில் அதி சக்தி வாய்ந்த இரு மின்குமிழ்கள் பொருத்தப்பட்டன. மின் இணைப்புகள் திரு: த.இராசலிங்கம், தச்சனொல்லை திரு க.மார்க்கண்டு ஆகியோரது வீடுகளி லிருந்தும், கொக்கட்டியாவளவு மற்றும் முள்ளாவத்தை பிரதான மின் இணைப்பு களிலிருந்தும் மின்சாரம் பெறப்பட்டது. இப் போட்டிக்கு நடுவர்களாக சீ.இராசநாயகம், க.மகேந்திரராசா ஆகியோர் நியமிக்கப்பட்டனர். மைதானப் பொறுப்பாளராக ச.சந்திரமோகனும், சாப்பாடு குளிர்பானம் என்பனவற்றைத் திருமதி: பொன்னம்மா நடேசு, திருமதி: இராசமணி சீனித்தம்பி, திருமதி: மாணிக்கம் பொன்னையா, திருமதி: தவமலர் வரதராசா ஆகியோர் கவனித்துக் கொண்டனர். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க போட்டியில் *சி.செல்வநாதன், *ச.ஜெயானந்தன், க.கஜேந்திரன், க.சயானந்தன், க.செல்வநேசன், க.ஆனந்த நேசன், *க.சத்தியநேசன், சீ.செல்வநாயகம், பொ.தர்மநாயகம், பொ.தர்மசோதி, ந.செல்வரத்தினம்(அரி), *கி.கிருஸ்ணகுமார், *மா.நகுலேஸ்வரன், வி.சுந்தர லிங்கம், த.அசோகன், செ.கணேசன், ம.காகேந்திரன்(சாந்தன்), பொ.விசய நாதன், வி.விசயசோதி, த.வதிராசா, ச.அழகரத்தினம் ஆகியோர் விளையாடி னார்கள். (* இக் குறியிடப் பட்டவர்கள் காலமானவர்களைக் குறிக்கும்)

இப்போட்டியைக் காண்பதற்காக எமதூரவர்கள் மட்டுமன்றி அயலூரவர்களும் யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதிகளிலிருந்தும் பார்வையாளர் கள் ஆவலோடு வந்திருந்தனர். இரு அணி வீரர்களும் அணிவகுத்து நிற்க சிறப்பு விருந்தினர் திரு:த.இராசலிங்கம் முன்னாள் பா.உ அவர்களுக்கும் நடுவர்களுக்கும் வீரர்கள் அறிமுகப்படுத்தப்பட்டு சர்வதேச துடுப்பாட்ட விதிகளுக்கமைய போட்டி சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வினை இலங்கை வானொலிக்குத் தபால் மூலம் அனுப்பியிருந்தேன். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ்ச் சேவை 2ன் வர்த்தக சேவையின் விளையாட்டுச் செய்தியில் இலங்கையில் முதன் முதலாக மின்னொளியில் நடைபெற்ற போட்டி என அறிவிக்கப்பட்டது சிறப்பம்சமாகும். நொச்சியடி வெட்டையின்பெருமைகளில்இதுஒருசகாப்தம்என்றால்அதுமிகையில்லை.

தகவல் தந்தவர்கள்:- திரு: ந.செல்வரத்தினம்(அரி)(பிரதான தகவல்கள்), திரு: த.வதிராசா, திரு: த.அசோகன்



அஞ்சலி

# நீங்காத நினைவுகளில்... சிவஸ்ரீ தியாக.சோமாஸ்கந்த ராஜாக் குருக்கள் (கண்ணன் ஐயா)

■ கலாநிதி த. கலாமணி

அன்றிரவு(14.05.2021) 9.30 மணிக்கு எமது ஆலய மஹோற்சவ காலக் குருக்கள் சிவஸ்ரீ பால மனோகரக் குருக்கள் தொலை பேசியில் அந்தத் துயரச் செய்தியைச் சொன்னார். “உங்களுடைய மாணவன் தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் காலமாகி விட்டார், சேர். இப்போது தான் ஆஸ்பத்திரியிலிருந்து செய்தி வந்தது...” நம்ப முடியவில்லை; ஒரு மாதத்திற்கு முன்பு அவருடைய வீட்டில் உரையாடியிருந்தேன். அதன்பின் அவர் சுகவீனமாக ஆஸ்பத்திரியிலிருந்ததாகவும் அறிந்திருந்தேன். அவருடைய நோய் எனக்குத் தெரிந்ததுதான். நீரிழிவு நோயாளி. இரத்தத்தில் சர்க்கரையின்(Sugar) அளவு அதிகமாகும் போது அவரை வைத்தியசாலையில் வைத்தே வைத்தியம் செய்வார்கள்.

சிவஸ்ரீ சோமாஸ் கந்தராஜாக் குருக்கள் எமது அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயிலுடன் இரண்டறக் கலந்தவர். 1996 ஆம் ஆண்டில் எமது ஆலயத்தின் பிரதம குருவாகப் பொறுப்பேற்றுக் கொண்டவர் எமது ஆலயத்தின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டவராக ஆலய பரிபாலன சபையை வழிநடத்திச் சென்றார். எமது ஊர் மக்களின் ஆன்மிக வளர்ச்சிக்காக சிறப்பு விழாக்களின் போதெல்லாம் ஆன்மிக உரையாற்றி, எமது பால கணபதியின் பெருமைகளை எல்லாம் எடுத்துரைத்தார். அது வரை காலமும் எமது ஆலயத்தில் அலங்கார உற்சவமே இடம் பெற்றுக் கொண்டிருந்தது. அதனை மஹோற்சவமாக மாற்றுவதற்குரிய கட்டுமானங்களின் அவசியத்தை எடுத்துரைத்து பரிபாலனசபையை வழிப்படுத்தினார்.

சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் எமது ஆலயப் பிரதம குருவாக வருமுன்னரே எனக்கு அறிமுகமாகியிருந்தார். 1990 ஆம் ஆண்டு ஒருநாள் இரவு தும்பளை சக்திகோயிற் சூழலில் இடம்பெற்ற பட்டிமன்றம் ஒன்றுக்கு நான் தலைமை தாங்கச் சென்றவேளையில் சக்தி கோயிலில் என்னைத் தேடி வந்து தம்மை அறிமுகம் செய்து கொண்டார். தம்மை “கண்ணன் ஐயா” என்றே பலரும் அழைப்பதாகவும் சொல்லி வைத்தார். அன்று முதல் கண்ணன் ஐயா என்றே நானும் அழைத்து வந்தேன். பின்பு எமது ஆலயத்திற்குப் பிரதம குருவாக அவர் வந்தபோது எம்மிடையேயான உறவு வளர்ந்தது. தமது தந்தையாருக்கும் எனது தந்தையாருக்கும் அந்நாளிலேயே நெல்லண்டைப் பத்திரகாளி கோயிலில் ஏற்பட்டிருந்த தொடர்பு பற்றிக் குறிப்பிட்ட அவர், அந்த உறவு இன்று எம்மிடையே வளர்வது குறித்து வியந்தார்.

பேராசிரியர் சண்முகதாஸ் - மனோன்மணி தம்பதிகள் எழுதிய இத்திமரத்தாள் என்ற நூலில் அநுபந்தமாக எனது ஐயா எஸ் தம்பிஐயா அவர்கள் எழுதியிருந்த கட்டுரை பற்றி அவருக்கு நினைவுபடுத்தினேன். நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் அந்நாளில் பல தடவைகள் அண்ணாவியார் எஸ்.தம்பிஐயா குழுவினர் இசைநாடகங்களை மேடையேற்றியிருப்பதை தாம் ஏற்கெனவே அறிந்திருந்ததாக அவர் சொன்னார்.

சோமாஸ்கந்தராஜாக் குருக்களுக்கு அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயத்தின் வளர்ச்சியில் அளவில்லா அக்கறை ஏற்படக் காரணம் மூலவரான பால கணபதி மூர்த்தமாகும். அருள்மிகு, தவத்திரு சிவயோகர் சுவாமிகள் நிட்டையிலிருந்து பாலகணபதியை தரிசித்தவர் என்ற செய்தியை அறிந்த போது, இச்செய்தியைப் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் அவர் பதிவு செய்து வந்தார். மற்றுமொரு காரணமும் இருந்தது. அதனை எமது ஆலயத்திற்குப் பிரதம குருவாக வந்திருந்த காலத்திலேயே எனக்குச் சொல்லியிருக்கிறார். எமது ஆலயத்திற்கு வருவதற்கு சில வருடங்களின் முன்னர் ஒரு நாள் தாம் ஒரு கனவு கண்டதாகவும். அக்கனவில் இரண்டு மணிக்கோபுரங்கள் அமைந்த ஒரு பிள்ளையார் கோயிலில் தமது மகன் தனஞ்சயன் மணி அடிப்பதாகவும் தாம் பூஜை செய்வதாகவும் காட்சிகள் தெரிந்தன எனவும் அக்கனவின் பிரகாரம் கனவில் தெரிந்த பிள்ளையார் கோயில் அல்வாய் சாமணந்தறைப் பிள்ளையார் கோயிலே என்பது அவரது எண்ண முடிபாகும் எனவும் கூறினார்.

எமது ஆலயத்தில் 1987 ஆம் ஆண்டிலிருந்து கட்டுத்தேர் இழுப்பதே வழக்கமாக இருந்து வந்தது. 2000 ஆம் ஆண்டில் ஒன்பதாம் திருவிழா உபயகாரர் திரு க.கிருஷ்ணபிள்ளை அவர்களினால் பஞ்ச முக கணபதி எழுந்தருளி உபகரிக்கப்பட்ட வேளை பல குருமாரின் எதிர்ப்புகளின் மத்தியிலும் தேர்த்திருவிழாவின் போது பஞ்சமுக கணபதியை கட்டுத்தேரில் எழுந்தருளச் செய்தார். இதே பஞ்சமுக கணபதியை நான் அவுஸ்திரேலியாவில் இருந்த காலத்தில் கனவிற் கண்டதை எனது டயறியில் எழுதி வைத்திருந்ததை அவுஸ்திரேலியாவிலிருந்து திரும்பியபோது கிருஷ்ணபிள்ளை மாமா அவர்களுக்குக் காட்டினேன். எனது கனவும் பஞ்சமுக கணபதி தேரேறி

வந்தமையும் ஏக காலத்தில் நிகழ்ந்ததை நினைத்து நாம் இருவரும் வியந்தோம். பஞ்சமுக கணபதியை கனவில் கண்டநாளுக்கு மறுநாள் அந்நினைவாக "சிந்தையெல்லாம் நிறையும் அருட்கடலே" என்ற கீர்த்தனையை நான் எழுதியிருந்தேன். நான் அவுஸ்திரேலியாவால் திரும்பி வந்த போது கும்பாபிஷேகம் இடம்பெற்று மஹோற்சவமாக, சோமாஸ் கந்தராஜாக் குருக்களின் வழிநடத்தலில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. தேர்த்திருவிழாவிலன்று பஞ்சமுக கணபதியை கனவில் கண்டவேளை இயற்றிய பாடலைப் பாடுமாறு கிருஷ்ணபிள்ளை மாமா என்னைக் கேட்டுக் கொண்டார். அன்றிலிருந்து, ஒவ்வொரு வருடமும் திருவிழாக் காலத்தில் ஒருநாளேனும் அப்பாடலை உட்பிரகார வலம் வந்து ஈசான மூலையில் நிற்கும் வேளையில் யாகபூஜை முடிந்தவுடன் ரேவதி ராகத்தில் பாடி வருகிறேன். இப்பாடல் சோமாஸ்கந்தராஜாக் குருக்களுக்கு மிகவும் பிடித்த மான ஒரு பாடல். அதேவேளை, பஞ்சபுராணம் ஓதும் போது, முடிவில் சைவப்புலவர் சி.வல்லிபுரம் அவர்கள் பாடிய "நோக்கமொரு தீக்ஷையென" என்ற வெண்பாவை வாழ்த்தாகப் பாடுவதை வழக்கமாகக் கொண்டி ருந்தமையை அவதானித்த சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்கள். அந்த வாழ்த்துப் பாவை எப்போதும் பஞ்சபுராண முடிவில் பாடி அதனை ஒரு நியமமாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இன்று என்னைப்போல பலர் எமது ஆலயத்தில் பஞ்சபுராண முடிவில் அதே வாழ்த்துப் பாவைப் பாடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். ஈசானத்தில் தேவாரமும் புராணமும் ஓதியபின் ரேவதி ராகத்தில் "சிந்தையெல்லாம் நிறையும் அருட்கடலே" என்ற கீர்த்தனத்தை பாடுவதும் பொருத்தமானதும் உசித மானதும் கூட என்று கூறி என்னை ஊக்குவித்தவரும் சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்களே. திரு தா.வீரசிங்கம் அவர்களின் குடும்பத்தினரால் எமது ஆலயத்தில் "கொடித்தம்பம்" நிறுவப்பட்டபின்னர் அலங்காரத் திருவிழாவை மஹோற்சவமாக மாற்றியவேளை, மஹோற்சவ காலப் பிரதம குருவாகவும் செயற்பட்டு பத்துத் திருவிழாக்களுக்கும் முறையே கொடி யேற்றத்திருவிழா, மாம்பழத்திருவிழா, மதுரத்திருவிழா, பூந்தண்டிகைத் திருவிழா, திருவிளக்குத் திருவிழா, மஞ்சத் திருவிழா, சப்பரத்திருவிழா, வேட்டைத்திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா எனவும் பதினோராம் நாளில் பூங்காவனத் திருவிழா எனவும் பெயர்சூட்டி மஹோற் சவ காலத்தை நாம் கோலாகலமாகக் கொண்டாடி மகிழ வைத்தவரும் சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்களே.

இதனிடையில் சோமாஸ் கந்தராஜாக் குருக்கள் அவர்களின் பரம்பரைக் கோயிலான நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயிலில் "அக்கோயிலின் பரம்பரைப் பூசகர் சோமாஸ்கந்தராஜாக் குருக்களே என்ற நிலை" தொடர்பாக வழக்கு ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்த வழக்கு 2002 இல் முடிவுக்கு வந்தபோது, சோமாஸ்கந்தராஜாக் குருக்களுக்குச் சாதகமாக தீர்ப்பு அமைந்தது. இவ்வேளையில் எமது ஆலயமும் பெரும் ஆலயமாக வளர்ச்சி பெற்றிருந்தமையால், இரண்டு ஆலயங்களிலும் ஒரே நேரத்தில் நித்திய பூஜைக் கருமங்களை நிறைவேற்று வதிலுள்ள சிரமங்களை உணர்ந்து எமது ஆலயத்தில் நித்திய பூஜைக்கென தமது சகோதரரான சிவஸ்ரீ தியாக.அமிர்த்தகடீசர் அவர்களை சோமாஸ் கந்தராஜாக் குருக்கள் நியமித்துக் கொண்டார். ஆனாலும், மஹோற்சவத்தின் போதும் வேறு விசேட விழாக்களின்போதும் தாமே பிரதம குருவாகக் கடமையாற்றினார். சில வருடங்களின் பின்னர் அமிர்தகடீசர் குருக்கள் இயற்கை எய்திய போது அமிர்தகடீசர் அவர்களின் மைத்துனரான இரத்தினேஸ்வரக் குருக்கள்(குகன் ஐயா) எமது கோயிலைப் பொறுப் பேற்றுக் கொள்ளவும் வழிசமைத்தார். அதன் பின்பு எமது ஆலயத்தின் மஹோற்சவத்திலும் பிறகருமங்களிலும் பிரதம ஆலோசனை வழங்கும் குருக்களாக செயற்பட்டதோடு அவ்வப்போது எமது ஆலய பூஜை நடைமுறை சார்பாக எழும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பவராகவும் சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் விளங்கி வந்தார்.

இவ்வாறாக அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் வளர்ச்சியில் முழுமையான பங்களிப்புச் செய்திருந்த சோமாஸ் கந்தராஜாக் குருக்கள் அவர்கள் எமது ஊரின் வட பால் எல்லையில் அமைந்திருக்கும், காத்தவராயர் கோயில், "அருள் மிகு வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானமாக" வளர்ச்சி காண்பதற்கும் அங்கு இன்று அலங்கார உற்சவம் இடம் பெறுவ தற்கும் பிரதம ஆலோசகராகவும் பிர திட்டா குருவாகவும் விளங்கினார். ஒரு சிறிய கட்டடத்தில் அமைந் திருந்த எங்கள் குலதெய்வமான காத்தானுக்கு மண்டபம் அமைத்து மூலவிக்கிரகம் ஒன்றைக் கொண்ட ஓர் ஆலயமாக மிளிரச் செய்ய வேண்டும் என்பது எனது மகனின் கனவாக இருந்ததை அறிந்து கொண்ட சோமாஸ்கந்த ராஜாக் குருக்கள் அவர்கள், 2010 இல், மகாபலிபுரத்திலிருந்து தம்மால் கொண்ட வரப்பட்ட ஐந்து கணபதி விக்கிரகங்களுள் ஒன்றை எனது மகன் பரணீதரனிடம் கையளித்தார். 2011 ஆம் ஆண்டு தை மாதத்தில் பொருத்தமான ஒரு நாளில், ஆதிவிநாயகர் தண்டு, காத்தான், பணிக்கர் ஆகியோரின் சூலங்களும் முருகனின் வேல்களும் "பால ஆலயத்திற்குக்" கொண்டு செல்லப் பட்டு, அன்றைய தினமே புதிய கட்டடத்திற்கான நாட்கல்லும் இடப்பட்டது. இக்கிரியைகளை எல்லாம் சோமாஸ்கந்தராஜாக் குருக் களே நிறைவேற்றி வைத்தார். வேதாரணியக் குருக்கள் அவர்களின் ஆலோசனையையும் கலந்து, அவர் கள் இருவரின் ஆசிகளோடும் எம் பெருமான் திருவருளோடும் கட்டட வேலைகள் நான்கு மாதங்களிலேயே பூர்த்தியாகின.

இதேவேளை, மூலஸ்தானத் தில் எத்தெய்வத்தை நிறுவுவது என்று ஐயம் எழுந்தபோது பூக்கட்டிப் பார்த்தவேளை, கணபதியையே எழுந்தருளச் செய்ய வேண்டும் என்பது தெளிவாகியது. 2011 ஆம் ஆண்டு வைகாசிப் பூசத்தினத்தன்று, மகாபலிபுரத்திலிருந்து கொண்டு வரப்பட்ட வரசித்திவிநாயகர் மூலஸ் தானத்தில் பிரதிட்டை செய்யப் பட்டு கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. பிரதிட்டா குருவாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்களே விளங்கினார். எமது குலதெய்வத்தின் பெயரைச் சிறப்பிக்கும் வகையில் "அருள்மிகு

வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ் தானம்" என்ற பெயரையும் அவரே சூட்டினார். மூலஸ் தானத்தில் வரசித்தி விநாயகர் விக்கிரகத்தை நிறுவிய தோடு ஆதிவிநாயகர் தண்டையும் நிறுவினார். ஆறு சந்ததிகளாக ஆதிவிநாயகராகப் பேணப்பட்டு வந்த தண்டு மூலஸ்தானத்திலேயே நிறுவப்பட்டமை எம்பெருமான் திருவருளே. அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயத்திலும் "அருள்மிகு வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ் தானத்திலும் மூலவர் பிரதிஷ்டை செய்யப்பட்ட தின மாக வைகாசிப் பூசம் அமைந்ததும் இறைவன் திருவருளே.

அருள்மிகு வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானத்தில் அலங்காரத் திரு விழாவையும் நிகழ்த்த வேண்டும் என்ற பரணீதரனின் விருப்பமும் 2019 இல் நிறைவேறியது. வசந்த மண்டபமும். வைரவர் மண்டபமும் அமைக்கப்பட்டு வரசித்தி விநாயகர் எழுந்தருளியும் வைரவர் விக்கிரக மும் உரிய கிரியைகளுடன் சாந்நித்தியம் பெறச் செய்யப் பட்டன. அலங்கார உற்சவகாலம் எமது அயலூர்களில் உள்ள ஆலயங்களின் உற்சவ காலங்களிலோ பிரபல்ய மான ஆலயங்களின் உற்சவகாலங்களிலோ அமைந்து தடையாக இருக்கக் கூடாது என்ற காரணத்தால், ஆவணிப்பூசத்தை தீர்த்தோற்சவ தினமாகக் கொண்டு உற்சவத்தைச் செய்வோம் என சோமாஸ்கந்தாராஜாக் குருக்கள் தீர்மானம் செய்தார். வேட்டைக்காக அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயிலுக்குச் சென்று வரலாம் என்றும் அவரே ஆலோசனை கூறினார். தீர்த்தோற்சவ தினமான ஆவணிப்பூசத்தை நியமமாக்குவதற்காக ஒவ்வொரு மாதமும் வருகின்ற பூச நட்சத்திரத்தினத்தில் விசேட அபிஷேகம் செய்து திருவுலாவும் வரவேண்டும் எனவும் நியமம் கூறினார். முதலாவது அலங்கார உற்சவத்தின் போது, வரசித்திவிநாயகரின் பிரமாணத்திற்கேற்ப எழுந்தருளியை அமைக்கச் சொல்லி வேதாரணியக் குருக்கள் வகுத்திருந்தார். ஆனால், திருவுலா வருகின்ற போது, சாத்துப்படிக்கு மத்தியிலே எழுந்தருளி மறைந்து போவதைப் பலரும் அவதானித்தனர். இதனை சோமாஸ்கந்தராஜாக் குருக்களுக்கு நான் எடுத்துச் சொன்ன போது, அவர் ஆலயத்திற்கு வருகை தந்து மூலஸ்தானத்தினுள் சென்று ஆதிவிநாயகர் தண்டின் பிரமாணங்களுக்கு அமைய புதிய எழுந்தருளியை அமைக்குமாறு ஆலோசனை சொன்னார் அவரின் ஆலோசனைப்படி இரண்டாவது வருட உற்சவம் புதிய எழுந்தருளியையும் முன்னைய எழுந்தருளியையும் ஒன்றாக வைத்தே மேற்கொள்ளப்பட்டது. மூலஸ் தானத்தில் வரசித்தி விநாயகரோடு ஆதிவிநாயகர் தண்டையும் நிறுவியமை இதனால் தானோ என்று வியந்தோம். உற்சவம் ஆரம்பித்த காலத்திலிருந்து, இரண்டு வருட கால உற்சவத்திலும் முதலாம் நாளில் (கொடியேற்ற நாள்) ஆன்மிக உரையை ஆரம்பித்து, சமய தத்துவங்களை விளக்கியும் வந்தார். இதேவேளை, நெல்லண்டைப் பத்திரகாளி கோயிலில் தமது நேர்த்திக் காக நான்கு தடவைகள் எனது அண்ணாவியத்திலான இசை நாடகங்களை அங்கு மேடையேற்றினார்.

இவ்வாறாக, எமது ஊரின் இரு ஆலயங்களிலும் பிரதம குருவாக விளங்கி, வளர்ச்சிக்கு வித்திட்டு தொடர்ந்து வரும் இயக்கத்திற்கும் வழிசமைத்தவர் சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜாக்குருக்களே என்ற வகையில் அவரின் அமரத்துவம் எமக்கு பேரிழப்பே. சைவசித்தாந்த பண்டிதராக விளங்கிய அவர் சோதிடராகவும் வைத்தியம் தெரிந்தவராகவும் கூட விளங்கினார். ஞானம் அவரிடத்தில் நிறைந்து ததும்பியது. அவரின் உடலின் தேஜஸ் எல்லோரையும் கவரும் தன்மையது. ஆசிரியத் தொழிலையும் அவர் சிறப்பாகவே செய்து வந்தார். கல்வியில் உயர்பட்டங்களைப் பெற்றுக் கொண்டார். தமக்கு கல்வி அளித்த ஆசிரியர்களை அவர் எப்போதும் போற்றி வந்தார். கல்வி டிப்ளோமா கல்வி நெறியில் என்னிடம் பயின்ற காரணத்தினால் தமது வித்யா குருக்களுள் ஒருவராக எனக்கும் மதிப்பளித்து வந்தார். அவரின் பொன்விழாவின்போது என்னையும் கௌரவித் தார். பரணீதரனுக்கு பூஜை முறைகளைச் சொல்லிக் கொடுத்த அவர், பரணீதரனின் மகன் கலாதரன் எட்டு வயதைப் பூர்த்தி செய்யும்போது அவனுக்கு மந்திரங் களைப் போதிப்பேன் என்றும் கூறியிருந்தார். சோமாஸ் கந்தராஜாக் குருக்கள் அவர்களுக்கு புவனேஸ்வரி அம்மா அவர்கள் நல்ல மனைவியாக அமைந்திருந்தார். அவரின் பிள்ளைகளும் சுட என்னை தமது தந்தையின் "வித்யா குரு" என்ற ஸ்தானத்தில் வைத்தே மதிப்பளித்து வந்தனர். அவருடைய குடும்பமும் எனது குடும்பமும் நல்ல உறவையும் பேணி வந்தன. சோமாஸ்கந்தராஜாக் குருக்களும் நானும் அச்சுவினி நட்சத்திரம். இதனால் துன்பங்களும் இருவருக்கும் ஏக காலத்தில் வரும். நாங்கள் இருவரும் எங்கள் பிறந்த தினங்களின்போது வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்வோம். கல்வி டிப்ளோமா நெறியில் வழிகாட்டலும் சீர்மியமும் (Guidance and Counselling) என்ற பாடத்தை அவர் என்னிடம் கற்றிருந்தார். அதன் பின்பு அவர் ஒரு சீர்மியராகச் (counsellor) செயற்பட்டு, மாணவர்களுக்கும் சீர்மியம் போதித்து வந்தார்.

எங்கள் ஆலயங்களைப் பொறுத்தவரையிலும் எமது ஊரவரைப்பொறுத்தவரையிலும் எமது குடும்பத்தைப் பொறுத்தவரையிலும் அவரின் நல்லாசி களும் சித்தமும் என்றும் எம்முடன் துணையிருக்கும் அவர் இறைவன் பாதங்களில் அமைதி பெறுவார்.



திரு திருமதி கிருஷ்ணபிள்ளை சிவக்கொழுந்து தம்பதியினரின் புத்திரன் அருந்தவராஜா அவர்களும் திரு திருமதி மலர்ராசா செல்வராணி தம்பதியினரின் புத்திரி ஜனார்த்தனி அவர்களும் 23.05.2021 அன்று திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார்கள்.

அஞ்சலி

## திருமதி புஷ்பராணி பாலசண்முகம்



*எமது அல்வாய் கிராமத்தின் பாலசண்முகம் புஷ்பராணி அவர்கள் **14.05.2021** அன்று இயற்கை எய்தியுள்ளார். அம்மையார் ஈழத்தில் அனைவராலும் நன்கு அறியப்பட்ட சங்கானை நிச்சாமம் என்னும் கிராமத்தில் **10.08.1952** இல் கார்த்திகேசு, வள்ளிப்பிள்ளை தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்தார். தயாநிதி, புவனேஸ்வரநாதன், அசோகராணி, வில்வராணி, யோகராணி என சகோதரங்களையும் பெற்றுக் கொண்டார். சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையில் சாதாரணதரம் வரை கல்வி பயின்றார். சங்கானையில் இயங்கிய கண்ணாடித் தொழிற்சாலையில் சிலகாலம் கடமையாற்றியவர். இவருடைய குடும்பம் சாதியத்துக் கெதிரான போராட்டங்களில் தீவிரமாக இயங்கிய குடும்பமாக விளங்கியது. இவரது தந்தையார் சாதியப் போராட்டத்தில் கயவர்களால் கொல்லப்பட்டார். புஷ்பராணி அவர்கள் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயப் பிரவேசம், நிச்சாமம் சங்கானைப் பிள்ளையார் ஆலயப் பிரவேசம், தேநீர் கடைப்பிரவேசப் போராட்டங்கள், மயான சாதியப் போராட்டங்களில் முன்னின்று பங்கேற்றவர். அமைதியானவ ராகவே நாம் அவரை அறிந்திருந்த போதும் அவர் இவ்வாறானதொரு சாதியக் கொடுமைகளுக்கு எதிரான போராளி என அறிந்தபோது அவரை சரியான வகையில் ஆவணப்படுத்தாமல் போன தவறு எம்மை சுட்டெரிக்கின்றது. **1974** இல் எமதூரைச் சேர்ந்தபாலசண்முகம் அவர்களை திருமணம் செய்து எமதூர் வாசியானார். எப்போதும் சிரித்த முகத்துடன் யாருடனும் எந்த முரண்பாடுகளும் அற்ற அமைதியான வாழ்க்கை வாழ்ந்து வந்தார். இவர் தனது ஒரே மகளான கஜித்தா மீது அளவு கடந்த பாசம் உடையவராகவும் அவரை ஒரு சிறந்த கல்வியாளராக ஆக்க வேண்டும் என்ற சிரத்தையுடன் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்து அதில் வெற்றியும் கண்டார். இவரது மகள் கஜித்தா ஆசிரியராகவும் எமது மனோகரா விளையாட்டுக் கழகத்தின் முன்னணி வீராங்கனையாகவும் திகழ்பவர். அமைதியாக வாழ்ந்து யாருக்கும் தீங்கில்லாது வாழ்ந்து இறைவனின் திருப்பாதங்களை அடைந்துள்ள அம்மையாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை நாங்கள் வேண்டிக் கொள்கிறோம்.*

**– க.பரணீதரன்**

---

அஞ்சலி

## திருமதி சரஸ்வதி பாலசண்முகம்

*இவர் அல்வாய் மயிலிட்டி குறிச்சியில் வாழ்ந்து வந்தவர்களான அமரர்கள் திரு திருமதி மயிலு (மயில்வாகனம்) தங்கம்மா தம்பதிகளின் இரண்டாவது புதல்வி ஆவார். தனது ஆரம்பக்கல்வியை அயல் பாடசாலையான வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழக்கலவன் பாடசாலையில் கற்றுத் தேறினாராயினும் தொடர்ந்து கல்வியை முன்னெடுக்காது தனது குடும்பத்துக்காக அயர்வின்றி உழைத்துக் கொண்டிருந்தார்.*

*அமரர் அவர்களின் தந்தையார் அமரர் வ.மயிலு அவர்கள் கடின உழைப்பாளியாவார். இவரது உழைப்பும் மகளின் ஒத்துழைப்பும் குடும்பம் செழித்தோங்க வழி வகுத்தது எனலாம். இதன் பயனாக எமது ஆலய(சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார்) மகோற்சவ ஐந்தாம் திருவிழாவை தனியொரு மனிதனாக பொறுப்பேற்றுக் கொண்டதோடு அதனை முன்னின்றும் செயற்படுத்தி வந்தார். அது மட்டுமல்லாமல் ஸ்கந்த சஷ்டிப் பூசையின் முதலாம் நாள் உபயத்தையும் பொறுப்பேற்று மிகச் சிறப்பாக செய்து வந்தார். இவற்றோடு மட்டும் நின்று விடாமல் காத்தவராயர் ஆலயத்தில் திருவெம்பாவை கால பூசை ஒன்றையும் பெரும் படையலுடன் செய்து வந்தார். இவை யாவும் அக்காலத்தில் வியந்து பார்க்கப்பட்ட பேசப்பட்ட இவர்களின் செயற்பாடுகளில் முக்கியம் வாய்ந்தவையாகும்.*

*திருமண காலம் வரை தனது உடன்பிறப்புகளை வளர்ப்பதிலும் ஊக்கப்படுத்துவதிலும் பெற்றோருக்கு உறுதுணையாகவிருந்தவர். திருமண காலம் பொருந்தி வர தந்தையின் சகோதரி திருமதி கதிராசி(முத்துக்குட்டி) கணபதிப்பிள்ளை மகன் திரு பாலசண்முகம் அவர்களை பெற்றோரின் விருப்பப்படி மணம் முடித்து இல்லற வாழ்வில் இணைந்து கொண்டார்.*

*விடுதலைப்போராட்டம் நெருக்கடியைச் சந்தித்தவேளை, அரசபடைகள் ஊருக்குள் ஊடுருவிய காலங்களில் போராளிகளுக்கு தகவல் பரிவர்த்தனை செய்கின்ற ஒரு ஊடகமாகத் திகழ்ந்தவர். இராணுவ சோதனையின் போது தனது புத்திசாலித்தனங்களைப் பயன்படுத்தி தப்பித்துக் கொண்ட சம்பவங்களை எங்களுடன் பகிர்ந்து கொண்டவை இன்றும் எம் மனதில் பசுமையாக உள்ளது. இவ்வாறு வெளியே தெரியவராத விடுதலைக்கு தன்னாலான சிறு பங்களிப்பை செய்து கொண்ட பெண்மணி திருமதி சரஸ்வதி பாலசண்முகம் ஆவார். இவர் மனோகரா சிரேஷ்ட பிரஜைகள் சங்க உறுப்பினராக இருந்தவர். இவர் அமரர் திருமதி வனிதாமணி வடிவேலு(அருந்துரை). ஜெயக்கொடி, சபாமணி. அமரர் வேல்மணி. அமரர் செல்வி சாந்தினி(அன்னம்), தயாமணி ஆகியோரின் உடன்பிறப்பாவார். இவரை உடன் பிறப்புகள் எல்லோரும் "சின்னக்கா" என்றே வாஞ்சையோடு அழைத்து வந்தார்கள். அண்மைய நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்த சின்னக்கா என்று எல்லோராலும் அழைத்துவரப்படுகின்ற திருமதி சரஸ்வதி பாலசண்முகம் அவர்கள் **17.05.2021** அன்று காலை இவ்வுலகை விட்டு நீங்கினார். அமரரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆலடியானை வேண்டி அன்னாரின் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் "நாங்கள்" எமது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.*

**– செல்லக்குட்டி கணேசன்**

**1987 ஆம் ஆண்டு வைகாசி மாதம் ஒப்பரேசன் லிபரேசன் இராணுவ நடவடிக்கையில் அவலச் சாவடைந்த எம்மவர்களுக்கு எமது அஞ்சலியைச் செலுத்தி அதில் மரணித்த எம்மவர்களது பதிவாக தொடர்பதிவுகள் இடம் பெறுகின்றன.**



# தொழிலதிபர்
# அமரர் கார்த்திகேசு ஆழ்வாப்பிள்ளை

எங்கள் கிராமத்தின் தவிர்க்கப்பட முடியாத ஆளுமைகளில் அமரர் கார்த்திகேசு ஆழ்வாப்பிள்ளை அவர்களும் ஒருவராவார். எமது மூதாதையர் பலரின் பெயர்கள் பெரும்பாலும் "அன்" விகுதியிட்டே அழைக்கப்பட்டது அல்லது கட்டாயப்படுத்தப் பட்டது. அந்த மரபிலிருந்து விலகி தனித்து மிளிர்ந்து நிற்பது ஆழ்வாப் பிள்ளை எனும் நாமம்.

எங்கள் கிராமத்தின் வாயிலில் அமைந்துள்ள மிக அழகிய சிற்றூர் தேவரையாளி இங்குள்ள பலர் எமது உறவுகளாகவும் நண்பர்களாகவும் காணப்படுகின்றனர். இவ்வூரில் வாழ்ந்த கார்த்திகேசு செல்லம் தம்பதிகளுக்கு மூன்றாவது மகனாக 1936 ஆம்ஆண்டு பிறந்தார். கல்வியை தேவரையாளி சைவத் தமிழ் வித்தியாலயத்தில் பெற்றுக் கொண்டார். கற்ற காலங்களில் கல்வியிலும் விளையாட்டுகளிலும் சிறப்பாக செயற்பட்டார். இந்நிலையில் தனது குடும்பத்தின் பொருளாதார வளத்தை உயர்த்தும் நோக்கோடு பாடசாலைக் கல்வியை இடை நிறுத்திக் கொண்டு தலைநகர் கொழும்பு சென்றார். அங்கே அவரது மூத்த சகோதரனுடன் இணைந்து பாதணி உற்பத்தித் தொழிலை பயின்றார். அத்தொழிலை மிகவும் ஆர்வத்துடன் பயின்றதால் அதில் சிறப்பு வல்லுனராக மாறினார்.

பெரும்பாலான தொழிலாளர்கள், தொழிலாளர்களாகவே இறுதி வரை இருப்பர். அவர்களில் மிகச் சிலரே முதலாளியாக மாறுவதை நாம் பார்த்திருக்கின்றோம். அப்படிப்பட்டவர்கள் மிகவும் புத்திசாலிகளாகவும் தன்னம்பிக்கை மிக்கவராகவும் தலைமைத்துவ பண்பை இயல்பாகவே கொண்டவர்களாக இருப்பர். அப்படியான ஆளுமைப்பண்பு மிக்கவராகவே அமரர் ஆழ்வாப்பிள்ளை அவர்கள் விளங்கினார்கள். அதற்கு சான்றாக அமைந்தது யாழ்ப்பாணம் நகர் மத்தியில் நவீன சந்தைப் பகுதியில் இரு கடைத்தொகுதிகளை எடுத்து "சந்திராஸ் சூபலஸ்" எனும் ஸ்தாபனத்தை நீண்ட காலமாக நடாத்தி வந்தார். யாழ் நகர் மத்தியில் சொந்தமாக கடை நடாத்துவது என்பது எம்மவர்களைப் பொறுத்தவரையில் அந்தக் கால கட்டத்தில் சமுதாய ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் மிகச் சவால் மிக்க விடயமாகவே காணப்பட்டது. எந்தச் சவால்களையும் வெற்றி கொள்பவனே ஆளுமையுள்ள தலைவனாகக் கணிக்கப்படுகின்றான். மேலும் அமரர் அவர்கள் அதே காலப் பகுதியில் எமது ஊரில் "சந்திராஸ் சொப்பிங் சென்ரர்" எனும் பல்பொருள் வாணிபத்தையும் சம காலத்தில் தனது இல்லத்தில் பாதணி உற்பத்தி தொழிற்சாலையையும் நடாத்தி வந்தார். இதன் மூலம் எம்மவர் பலர் தொழில் வாய்ப்பை பெற்றுக் கொண்டனர். இதன் மூலம் இவர் ஒரு தொழில் முகவராகவே அனைவராலும் கணிக்கப்பட்டார்.

இவருடைய இந்த வெற்றிகளுக்கு இவரது மனைவியாரும் மூலமாக விளங்கினார். அல்வாய் கிராமத்தை சேர்ந்த சரவணை வள்ளியம்மை தம்பதியரின் மகளான சிவதங்கமலர் அவர்களை திருமணம் புரிந்து சிறந்த மக்கட்பேறுடன் மிகச் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தார்.

இவர் தனது காலத்தில் தான் பிறந்த ஊருக்கும், புகுந்த ஊருக்கும் பல்வேறு பொதுச் சேவைகளையும் செய்துள்ளார். இவரது பிறந்த கிராமமான தேவரையாளிக் கிராமத்தின் பல்வேறு வளர்ச்சிப் படிகளிலும் இவரது பங்களிப்பு முதன்மை பெற்றிருந்தது. தேவரையாளி சனசமூக நிலையத்தின் ஆரம்பத் தொற்றத்திற்கு இவருடைய பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்பட்டது. அந்த நிலையத்தை ஒரு நிலையான இடத்தில் அமைப்பதற்கு இவர் பல வழிகளில் உதவினார். அதேபோன்று "யங்லையன்" விளையாட்டுக் கழகத்தின் பல்வேறு செயற்பாடுகளிக்கும் அதேபோன்று நரசிம்மர் ஆலயத்தின் வளர்ச்சிக்கும் இவரது பங்களிப்பு மிக உன்னதமானதாகக் காணப்பட்டது. இவ்வாறே தான் புகுந்த கிராமமான அல்வாய் கிராமத்தின் மனோகரா சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்கும் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் கோயிலின் வளர்ச்சிப் படிகளிலும் இவரதும் இவரது குடும்பத்தினரதும் பங்களிப்பு மிக நிறைவாகவே காணப்பட்டது.

இயல்பாகவே ஜீவகாருண்யம் மிக்கவராக இவர் விளங்கினார். வறுமையில் வாடிய பல குடும்பங்களுக்கு தன்னாலான நிதி, பொருள் உதவியை வழங்கியிருந்தார். குடும்ப உறவுகளுடன் மிகவும் அன்பாகவும் அரணானவும் இருந்து அவர்களை காத்து வந்தார்.

துரதிஷ்டவசமாக, 1987 ஆம் ஆண்டு எமது பிரதேசத்தில் இடம்பெற்ற "ஒப்பிரேசன் லிபரேசன்" எனும் இராணுவ நடவடிக்கையின் போது அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தஞ்சமடைந்த வேளையில் எறிகணை வீச்சில் அகப்பட்டு கொல்லப்பட்டார். அல்வாய்கிராமத்தின் சோகமாக அமைந்த அந்த சம்பவத்தால் அமரது குடும்பமும் தளர்ந்து போய் விட்டது. எனினும் அவரது ஆளுமைத்திறன் அவரது பிள்ளைகள், பேரப் பிள்ளைகளிடம் இயல்பாகவே காணப்பட்டதால் தலைவனை இழந்த போதிலும் பினீக்ஸ் பறவைகளாய் மீளெழுந்து எமது கிராமத்திற்கு வலுச்சேர்க்கும் சந்ததியை அமரர் ஆழ்வாப்பிள்ளை அவர்கள் எமக்கு விட்டுச் சென்றிருக்கின்றார் என்றே கூற வேண்டும்.

**– க.தர்மதேவன்**

## திருமதி யோகேஸ்வரி சிவபாதசுந்தரம்
## செல்வி யோகேந்திரன் மைதிலி

*1987 கால இராணுவ நடவடிக்கை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் எல்லோரையும் போலவே யோகேஸ்வரி(அக்காவின்) உயிரையும் பறித்தது. ஆலயத்திற்கு உறவுகளுடன், தனது இளைய மகளையும் அழைத்துச் சென்றவருக்கு நடந்த கொடூரம் யாழ் மாவட்டத்திற்கு வெளியே வாழ்ந்து கொண்டிருந்த அன்னாரின் மூன்று பிள்ளைகளையும் வெகுவாகப் பாதித்திருந்தது. நாற்பத்தி ஆறு வயதில் அகால மரணத்தைத் தழுவிக் கொண்ட யோகேஸ்வரி சிவபாதசுந்தரம் அல்வாய் தனத்தியவத்தை குறிச்சியில் வாழ்ந்து வந்தவர்களான நடேசு தங்கமுத்து தம்பதி களின் புதல்வி ஆவார். வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் கல்வி கற்ற இவர் பாடசாலைப் படிப் பிலும் இதர செயற்பாடுகளிலும் தனது திறமையை வெளிக்காட்டினார் என அறியக் கூடியதாக உள்ளது. இதனால் ஆசிரியர்களால் அதிகமாக உச்சரிக்கப்பட்ட பெயர் யோகேஸ்வரி ஆகும். எவருடனும் இயல்பாக பழகும் சுபாவம் கொண்ட இவர் எவருடைய மனங்களும் புண்படும்படியான வார்த்தைப் பிரயோகங் களை உச்சரித்ததில்லை. எவருடனும் உரத்துக் கதைத்த தாக நாங்கள் அறிந்ததில்லை. அவ்வளவு பக்குவத்துடன் எல்லோருடனும் பழகி வந்தார். அன்னாருடைய மூத்த மகன் யோகேந்திரன் மனைவி ரவிமலர் தம்பதிகளின் பதினொரு மாதங்களே ஆன குழந்தை மைதிலியும் கோரத்தாக்குதலில் மரணமானதும் பெரும் துயரமே. இருவரின் ஆத்மாக்களும் சாந்தி பெற இறைவனை இறைஞ்சுவதோடு, குடும்பத்தினருக்கும் எமது ஆறு தலையும் சொல்லிக் கொள்கிறோம்.*

–செல்லக்குட்டி கணேசன்

## அமரர் வி. சாந்தலிங்கம் *26.6.1967-29.05.1987*



*எல்லோரையும் போலவே அவனும் குடும்பத்தினருடன் வேவிலந்தை முத்து மாரி அம்மன் ஆலயத்தில் தஞ்சமடைந் திருந்தான். யாரறிவார் "ஆட்லறி"யே அவன் ஆவியைப் பறிக்குமென்று. இயந்திரப் பறவைகளின் இரைச்சலுக்கு மத்தியிலும் அவற்றிலிருந்து வீசப்பட்ட துண்டுப் பிரசுரங்களை பொறுக்கி எடுப்பதிலும் அவற்றில் உள்ளவற்றை உறவுகளுக்குப் படித்துக் காட்டுவதிலும் சிரத்தை எடுத்திருந்தான். மாலைநேரம். ஊரே பரபரப்பாக இருந்தது. இவற்றை நம்பி போகலாமா? விடலாமா? நம்பித்தான் ஆக வேண்டிய சூழல். காதுக்கு வந்த செய்திகள் அப்படித்தான் பீதியடைய வைத்தன. எல்லோரும் முத்துமாரி அம்மன் சந்நிதானத்தில் தஞ்சமடைந்திருந்தனர். நானும்(செ.க) எனது குடும்பத்தினருடன் சென்றிருந்தேன். இந்த அவலத்தின் ஒரு சாட்சியுமாய் உள்ளேன். ஆலயத்தினுள்ளும் சுற்றுப் புறத்திலும் அடர்த்தியாய் மக்கள் கூட்டம். எங்கிருந்தோ ஏவப்பட்ட "ஷெல்" ஆலயத்தின் உட்புறமும் சுற்றுப் புறமும் வீழ்ந்து வெடித்ததில் அவ்விடம் அல்லோல கல்லோலப் பட்டிருந்தது. எதுவுமே தெரியவில்லை. ஒரே புகை மண்டலம். பலரும் தங்கள் தங்கள் உறவுகளுக்கு என்ன நடந்திருக்குமோ என்ற அச்சத்தில் உறைந்திருந்தனர். பலர் அவ்விடத்தை விட்டு வெவ்வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்தனர். எந்த விபரமும் தெரியாதவர்களாக நாமும் அவ்விடத்தை விட்டு எமது வீடுகளுக்கு வந்து சேர்ந்தோம். நேரம் செல்லச் செல்ல இருளையும் "ஆட்லறி"யின் சத்தங்களையும் மீறி அழுகுரல் சத்தங்கள் எமது சூழலை அதிர வைத்துக் கொண்டிருந்தன. அவ்வாறு அதிர வைத்த குடும்பங்களில் ஒன்றுதான் பன்னாம்பத்தைக்குறிச்சியைச் சேர்ந்த திருமதி அன்னம்மா விருத்தாசலம் குடும்பத்தினரின் அழு குரல்கள். நிலம் புலரவும் மீண்டும் எமது ஊரைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் ஆலடிப்பிள்ளையார் சந்நிதா னத்தில் சரணடைந்தோம். அங்கு இருக்கும்போது தான் தகவல்கள் மெல்ல மெல்ல கசிந்து வந்தன. சாமியும் இறந்து விட்டானாம். "சாமி" இவன் யார்? இவன் தான் "ஷாம்" என்று அவனது நண்பர்களால் நட்புரிமையோடு அழைக்கப்படுகின்ற வி. சாந்தலிங்கம். இவன் விருத்தா சலம் அன்னம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரன். சாந்தகுமாரி. சுந்தரலிங்கம், சுந்தரகுமாரி, இரத்தின குமாரி ஆகியோரின் சகோதரன். இவனை உறவுகள் யாவரும் "சாமி" என்றே செல்லமாக அழைத்து வந்தார்கள். 26.06.1967 ஆம்ஆண்டு பிறந்தவன். தனது கல்வியை யாழ்.தேவரையாளி இந்துக்கல்லூரியில் பயின்று க.பொ.த.(சா/த) இல் முதல் தடவையிலேயே நல்ல பெறுபேற்றைப் பெற்றான். ஒழுக்கமும் உயரிய பண்பும் கொண்ட இவன் குடும்பத்தின் வறுமை நிலையை உணர்ந்து படிப்போடு தொழிலுக்கும் சென்ற வந்தான். "சாவு" இவ்வளவு சீக்கிரம் இவனை வந்தடையு மென்று எவருமே நினைத்துப் பார்க்கவில்லை. 29.05.1987 அன்று "சாமி" எங்களுக்கெல்லாம் சாமி ஆனான். இந்நாளில் அவனையும் நினைத்துக் கொள் வதில் மனம் திருப்தியும் ஆறுதலும் அடைகின்றது. அவனது ஆத்மா சாந்தி பெற ஆலடியானை இறைஞ்சுவோம்.*

– செல்லக்குட்டி கணேசன்

## செ.ருக்மன் *24.05.1987-30.05.1987*

*30.05.1987 அன்று காலை எமது ஆலயத்தில் சரணடைந்திருந்தவர்களில், இளைஞர்கள் பலரை சுற்றி வளைத்த இராணுவத்தினர் சோதனை என்ற பெயரில் தங்களுடன் அழைத்துச் சென்றார்கள். இருந்தவர்களில் என்னையே(செ.க) முதலில் அழைத்தார்கள். அவ்வாறு அழைத்துச் சென்றவர்கள் எமது பெற்றோர்களுக்கு விசாரித்து புத்தி சொல்லி திருப்பி உங்களிடம் ஒப்படைக் கிறோம் என்று வாக்குறுதியளித்தார்கள். அதனை நம்பியே பெற்றோர் எங்களை கூடவே அனுப்பினார்கள். திரும்பி வருவார்கள் என்று நம்பிய பெற்றோர்கள் ஏமாற்றமடைந்தார்கள். எங்களை எங்கு கூட்டிச்*

செல்கிறார்கள், என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் போகிறார்கள் என்ற எந்த விபரமும் தெரிவிக்காமலேயே அழைத்துச் சென்றார்கள். இதன் தொடர் நடவடிக்கையாக அழைத்துச் செல்லப்பட்ட அனைவரும் கடற்கப்பல் மூலமாக காலி பூஷா தடுப்பு முகாமில் எங்களுக்காக பிரத்தியேகமாக ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு மண்டபத்தில் அடைத்து வைக்கப்பட்டிருந்தோம். படிப்படியாக விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்தார்கள். இறுதியாக ஐம்பத்திரண்டு பேர்களை விடுதலை செய்யாமலே தடுத்து வைத்தார்கள். அவர்களில் நானும் (செ.க.) நாகராசா ரகுவும் எமதூரை சேர்ந்தவர்கள். அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்குமிடையேயான இலங்கை - இந்திய ஒப்பந்தம், இந்தியப்படைகளின் வருகை எங்கள் ஐம்பத்திரண்டு பேரின் விடுதலையை சாத்தியமாக்கிற்று. விடுதலை பெற்று நானும் வீட்டிற்கு வந்தேன். வந்ததன் பிற்பாடுதான் மேலும் பல தகவல்களை அறியக் கூடியதாகவிருந்தது. அதில் மிகவும் அதிர்ச்சி தந்த வருத்தமான சேதி உறவுகள் எல்லோராலும் “நாதன்” என்றழைக்கப்படுகின்ற இயவராந்தோட்டம் குறிச்சியைச் சேர்ந்த திருநாவுக்கரசு செல்வநாதனின் பச்சிளம் குழந்தை ருக்மனின் மரணம். எல்லோரையும் போலவே செல்வநாதனும் குடும்பத்தினருடன் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் சரணடைந்திருந்தான். அவ்விடம் நடந்த அவலத்தில் தப்பித்துக் கொண்டவன் குடும்பத்தினருடன் உறவுகளின் உதவியோடு வீடு வந்து சேர்ந்தான். தனது சிறிய தாயார் திருமதி விஜயவேணி குகதாசன் வீட்டில் பாதுகாப்புக்கென வெட்டிக் கட்டப்பட்டிருந்த பதுங்குகுழியில் அவர்களுடன் தங்கியிருந்தான். பொழுது புலரவும் நாய்களின் குரைப்பு இராணுவத்தினரின் வருகையை பறைசாற்றிக் கொண்டிருந்தது. துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் பாதணி சத்தங்களும் அவர்களின் உரையாடல்களும் காதுக்கு எட்ட இராணுவம் தங்களை நெருங்கி விட்டதை உணர்ந்தார்கள். பதுங்குகுழியில் இருந்தவர்கள் அனைவரும் உயிரைக் கையில் பிடித்த வண்ணம் இருக்க ஆறு நாட்களே ஆன பச்சிளம் பாலகன் “ருக்மன்” அழுது கொண்டிருந்தான். அழுகையை நிறுத்த பல வழிகளிலும் முயற்சி செய்தும் பலனளிக்கவில்லை. பதுங்குகுழியிலேயே பச்சிளம் பாலகன் மூச்சடங்கினான். இராணுவத்தினரின் நடமாட்டம் அவ்விடத்தை விட்டு விலகியதும் பதுங்குகுழியில் இருந்து ஒவ்வொருவராக வெளியே வந்தனர். அப்போதுதான் குழந்தை இறந்து போனது எல்லோருக்கும் தெரிய வந்தது. பதுங்குகுழியில் இருந்த பல உயிர்களை தன்னுயிரைக் கொடுத்துக் காப்பாற்றிய அக்குழந்தையை இந்நாளில் நினைத்து பெருமிதமடைவதோடு பெற்றோரின் தியாக உணர்வையும் நெஞ்சில் நிறுத்தி அக்குழந்தையின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆலயடியானை “நாங்கள்” இறைஞ்சுகின்றோம்.

– செல்லக்குட்டி கணேசன்


## திருமதி நவசக்தி அருணாசலம்



எமதூரில் சைவ ஆச்சாரத்தை கடைப்பிடித்து வாழ்ந்து வந்தவர்களில் திருமதி நவசக்தி அருணாசலம் அவர்களும் ஒருவராவார். இவர் எமது கிராமத்து முன்னோடிகளில் ஒருவரான சோதிடர் வே.தம்பையா அவர்களின் புதல்வியாவார். *19.06.1933* இல் பிறந்த இவர் அல்வாய் மயிலிட்டி குறிச்சியைச் சேர்ந்த முருகர் சோதிப்பிள்ளை தம்பதியினரின் மூன்றாவது புதல்வன் அருணாசலம் அவர்களை மணந்து மூன்று பிள்ளைகளுக்கு தாயானவர். சராசரிக்கு சற்று குறைவான உயரமும் நல்ல நிறமும் மெல்லிய உடல் அமைப்பையும் கொண்ட இவர் சிறுபராயத்திலேயே “தீட்சை” பெற்று விரத அனுட்டானங்களை அனுசரித்து வாழ்ந்தவர் ஆவார். இவர் சராசரி குடும்பப் பெண்ணாக இருந்து தனது குடும்பத்துக்காக ஓய்வின்றி உழைத்துக் கொண்டிருந்தார். *1987* இல் இடம்பெற்ற “லிபறேசன் ஒபறேசன்” இராணுவ நடவடிக்கை இவர்களுடைய வாழ்விலும் மிகுந்த பின்னடைவை ஏற்படுத்தியிருந்தது. அக்காலப் பகுதியில் கடும் சுகயீன முற்றிருந்தவர் *05.07.1987* இல் இராணுவ முகாமாக இருந்த நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் மில்லரின் தாக்குதலால் தாக்கியழிக்கப்பட்டபோது எல்லா மக்களுடனும் இவர்களும் இடம் பெயர்ந்து சென்றனர். நோய் வாய்ப்பட்டிருந்த நிலையிலும் பல கனவுகளை மனதிலே சுமந்து கொண்டு பிள்ளைகளையும் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புக்கு கடற்கரைவழியாக கால்நடையாகவும் பின்னர் கடல் வழியாகவும் சென்று மாத்தளன் பகுதியில் தரையிறங்கினர். நோயின் தாக்கம் அதிகரிக்க அங்கிருந்து நேராக புதுக்குடியிருப்பு அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பயனின்றி *19.07.1987* அன்று காலமானார். இறுதிக்கிரியையை கணவர், பிள்ளைகள் அங்கு வாழ்ந்து வந்த உறவுகளுடன் நிறைவேற்றினார்கள். இச்சந்தர்ப்பத்தில் அன்னாரையும் நினைவு படுத்துவதோடு அன்னாரின் அத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல ஆலடியானை “நாங்கள்“ இறைஞ்சுகிறோம்.

– செல்லக்குட்டி கணேசன்

## செல்வன் தர்மகுலசிங்கம் கோகுலரூபன்



தர்மகுலசிங்கம் கோகுலரூபன் *03.01.1979* இல் தர்மகுலசிங்கம் சந்திரமலர் தம்பதியினருக்கு மூத்தமகனாகப் பிறந்தார். துடியாட்டமான பிள்ளையாக வளர்ந்த கோகுலரூபன் யா/ வதிரி வடக்கு மெதடிஸ்த மிசன் பாடசாலையில் தன் கல்வியை மேற்கொண்டிருந்தார். *1987.05.29* அன்று அல்வாய் முத்துமாரி அம்மன் கோவிலில்

தஞ்சமடைந்திருந்த போது எறிகணை வீச்சில் படுகாய மடைந்து மந்திகை வைத்தியசாலையில் *30.05.1987* அன்று எம் எல்லோரையும் சோகத்தில் ஆழ்த்தி சென்றார். அன்னாரின் இழப்பு எம் கிராமத்து மக்களுக் கெல்லாம் சோகத்தை உண்டு பண்ணியது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாங்கள் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

– பரணீ

## திருமதி அன்னம்மா விஜயலிங்கம்
## அப்பையா சிவராசா
## திருமதி விஜயலஷ்மி சிவராசா





*1978* இல் எனது சகோதரியை திருமணம் செய்ததன் மூலம் எனது குடும்பத்தில் இணைந்து கொண்ட அ. சிவராசா எமதூரின் அபிமானியாவார். இவர் நல்ல கட்டடக் கலைஞராகவும், வெல்டிங் தொழிலாளியாகவும் திகழ்ந்தார். ஒலிபெருக்கி சேவையை எமதூரவர்களுக்காகவும் அயலூரவர்களுக் காகவும் செய்து வந்தவர்.

இவர் அல்வாய் கொக்கட்டியாவளவு குறிச்சி யில் வாழ்ந்து வந்த அமரர்கள் திருதிருமதி அப்பையா சிவபாக்கியம் தம்பதிகளின் ஏக புதல்வன் ஆவார். திருமண பந்தமூலம் எனது சகோதரி விஜயலஷ்மி அவர் களை கரம் பிடித்து நல்வாழ்வு வாழ்ந்து வந்தார். இவர் களுக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களை அன்புடன் வளர்த்து வந்தார்கள். மூன்றாவது பிள்ளை வயிற்றில் கருக்கொண்டிருந்த போது ஒப்பரேசன் லிபரேசன் இராணுவ நடவடிக்கை காரணமாக உயிர் பாதுகாப்பு வேண்டி அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த வேளை ஷெல்தாக்கு தலுக்கு உட்பட்டு மைத்துனர் சிவராசா, சகோதரி விஜய லஷ்மி ஆகியோர் ஸ்தலத்திலேயே பலியானார்கள்.

எனது தாயார் திருமதி விஜயலிங்கம் அன்னம்மா ஷெல் வீச்சில் படுகாயமடைந்த நிலையில் மறுநாள் அதிகாலை மந்திகை அரசினர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். பலத்த சோகத்தின் மத்தி யிலும் எனது தாயாரை பராமரித்து மீட்டுவிடலாம் என்ற நப்பாசையில் காலநேரம் பாராது நான் பரா மரித்து வந்தேன். இருப்பினும் வைத்தியம் பலனளிக் காத நிலையில் *21*ம் நாள் அம்மாவும் நம்மை விட்டுப் போனார்.

இவர்கள் மூவரின் இறப்பும் ஏனைய உறவு களின் இழப்புகளும் எங்கள் வாழ்வில் ஏற்படுத்திய காயங்களை எம்மால் இன்றுவரை ஜீரணிக்க முடிய வில்லை. இத்தருணத்தில் நாங்கள் மனோகரா ஆவணப் பத்திரிகையில், அவர்களைப் பற்றிய நினைவுகளை மீட்டு அவர்கள் பற்றிய பதிவினை எழுதியமை காயப்பட்ட எம்மனங்களுக்கு ஓர் ஒத்தடமாக அமைகின்றது. எமது தாயார், சகோதரி, மைத்துனர் மற்றும் ஏனையவர் களுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு எல்லோரினதும் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆலடியானை வேண்டிக் கொள் கின்றேன்.

– வி.விஜயராசா

## அமரர் சதாசிவம் சுபாகரன்



*1987* கால இராணுவ நடவடிக்கை காரணமாக பாதுகாப்பின் நிமிர்த்தம் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தஞ்சம் புகுந்த அமரர் சதாசிவம் சுபாகரனின் இழப்பு இன்றளவும் அமரரின் குடும்பத்துக்கு நீங்கா துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒன்பது வயதில் அகால மரணத்தை தழுவிய அமரர், மீராபவனம் அல்வாய், வடமேற்கில் சதாசிவம் மகாமணிதேவிக்கு ஐந்தாவது மகனாக *1978.03.13* இல் பிறந்தார். இவர் ஈஸ்வரன், மீரா, அனுரா, சுஜாதா, சிவகௌரியின் சகோதரனாவார். மிகத் துடினமும் சுறுசுறுப்பும் கொண்ட அமரர் வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் கல்வி கற்றார். அமரரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆலடி யானை வேண்டி நிற்பதோடு அவரின் குடும்பத்தாருக்கும் எமது ஆறுதலை சொல்லிக் கொள்கின்றோம்

– வி.கிருஷிகன்

## அமரர் கந்தர் மார்க்கண்டு



*27.12.1920* இல் கந்தர் பாறுபதி ஆகியோருக்கு மகனாக மார்க்கண்டு அவர்கள் அல்வாய் பிச்சந்தோட்டம் குறிச்சியில் பிறந்தார். இவருக்கு நாகமுத்து, மாணிக்கம், மீனாட்சி என மூன்று சகோதரங்கள் கிடைக்கப் பெற்றார். யா/வதிரி வடக்கு மெ.மித.க.பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பெற்றுக் கொண்ட இவர் இடை நிலைக் கல்வியை தேவரையாளி சைவ வித்தியா சாலையிலும் மேல் நிலைக்கல்வியை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார். இவர் இயவராந்தோட்டத்தைச் சேர்ந்த பொன்னம்மா அவர்களை கரம் பிடித்தார். அதன் பேறாக இவருக்கு கலாநிதி, நகுலேஸ்வரன் என இரு மகன்மார் கிடைக்கப் பெற்றார்கள். எண்கணிதம், தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம் போன்ற பாடங்களை நம்மவர் பலருக்கு கற்பித்து வந்தார். தனியார் தவறணைகளில் கணக்காள ராக செயற்பட்டவர். பின்னர் சுய தொழிலில் ஈடு பட்டார். ஊரின் பல நிறுவனங்களினதும் நிர்வாகங் களில் அங்கம் வகித்தார். *29.05.1987* இல் உயிர்ப்பாது

காப்புக்காக அல்வாய்முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த சமயம் ஷெல் வீச்சுக்கு இரையாகி எம்மிடம் இருந்து பிரிந்தார். அன்னாரின் இழப்பு எமது ஊரவர்களுக்கு பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாங்கள் பிரார்த்திக்கின்றோம்.

- பரணீ

## மார்க்கண்டு நகுலேஸ்வரன்
## நகுலேஸ்வரன் குமுதா



மார்க்கண்டு நகுலேஸ்வரன் அவர்கள் மார்கண்டு பொன்னம்மா தம்பதியிருனக்கு மகனாகப் பிறந்தார். யா/ தேவரையாளி இந்துக் கல்லூரியில் தனக்கான கல்வியைப் பெற்றுக் கொண்டார். அரச வைத்தியசாலையில் ஆரம்பத்தில் சிற்றூழியராக கடமையாற்றியவர் அங்கிருந்து விலகி தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சங்க ஊழியராக கடமையாற்றினார். எமது மனோகரா விளையாட்டுக் கழகத்தின் சிறந்த உதைபந்தாட்ட, துடுப்பாட்ட வீரராக திகழ்ந்தவர். துடுப்பாட்டத்தில் த.கலாமணி, செ.கணேசன் போன்றோருடன் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக களமிறங்கி எதிரணிக்கு சவாலான வீரராக திகழ்ந்தவர். வதிரி கதிரான்வளவை சேர்ந்த இராசராணி அவர்களை திருமணம் செய்து குமுதா, சர்வநிதி என இரு பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டார். இனிமையான



இல்லற வாழ்வை வாழ்ந்து வந்தார். உயிர்ப் பாதுகாப்புப் பொருட்டு அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த சமயம் ஷெல் வீச்சுக்காரணமாக உயிரிழந்தார். இவருடன் கூடவே இவரது *3* வயதேயான மகள் குமுதாவும் உயிரிழந்து எம் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தினார்கள். அன்னாரினதும் மகளதும் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை நாங்கள் வேண்டிக் கொள்கின்றோம்.

– பரணீ

## திருமதி செல்லம்மா மார்க்கண்டு *(1927 - 1987)*



எமது மனோகரா மண்ணின் கொக்கட்டியாவளவுக் குறிச்சியிலே இளையவி தெய்வானை தம்பதிகளுக்கு இரண்டாவது மகளாக *1927*ம் ஆண்டு பிறந்தார். வள்ளிப்பிள்ளை, இராசம்மா, அழகம்மா, பாக்கியம் மற்றும் வடிவேல்(அருந்துரை) ஆகியோர் இவரின் உடன் பிறந்தவர்கள் ஆவர். பருவ வயதடைந்ததும் எமதூரைச் சேர்ந்த சுவாமிநாதன் மார்க்கண்டு அவர்களை பெற்றோர் மணமுடித்து வைத்ததின் பேறாக மகாமலர்(மகான்),கருணாநிதி மற்றும் கருணாவதி(பதி) ஆகியோர் பிளளைகளாகப் பிறந்தனர். இள வயதில் கணவன் இறந்து விடவே தனது ஒரே சகோதரன் அருந்துரையின் அனுசரனையுடனும் குடிசைத் தொழிலான பாயிழைத்து வரும் வருமானத்திலும் தனது பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கினார். சகோதரனின் தொழில் சார் முயற்சியில் ஆதரவாக இருந்து செயற்பட்டார். தனது ஒரே மகன் பேராசிரியர் கருணாநிதி அவர்களை படிக்க வைத்து பட்டதாரி ஆசிரியராக்கி மகிழ்ந்தார். பின்நாளில் கருணாநிதி அவர்கள் தான் சார்ந்த கல்வித்துறையில் கலாநிதிப் பட்டம் பெற்று எமதூரின் கல்வியியலாளர்களில் முதன்மையானவராக எமதூருக்கு பெருமை தேடித் தந்தார். குறித்த காலங்களில் பிள்ளைகளுக்கு மணமுடித்து வைத்து மருமக்கள் பேரப்பிள்ளைகளுடன் மகிழ்வாய் இருந்த நேரத்தில் *1987*ம் ஆண்டு அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தங்கியிருந்தவர்களின் மீது இராணுவம் நடாத்திய எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டார். இச்சம்பவத்தில் இவரது இரண்டு பேரப்பிள்ளைகள் கிருஸ்ணகுமார்,தர்மேந்திரா ஆகியோரும் கொல்லப்பட்டனர்.


## செல்வன் கிருஸ்ணபிள்ளைகிருஸ்ணகுமார்*(1967-1987)*



பருவத்தின் வளர்ச்சி தந்த உடல்வாகு, முன்வாயின் கீழ் வரிசையில் இலேசாக உடைந்த பல்லொன்றையும் மீறி மயக்கும் புன்னகை, கழுத்தோடு ஒட்டிய மெல்லிய தங்கச் சங்கிலி, அயன்பண்ணிய அரைக்கை சேர்ட் மேலிரண்டு பட்டன்கள் திறந்தபடி, பெண்கள் சைக்கிளும் இல்லாமல் ஆண்கள் சைக்கிளும் இல்லாமல் இரண்டுக்கும் இடைப்பட்ட முக்காச் சைக்கிளில் வரும் ஸ்டைல் பார்ப்பவரை சொக்க வைக்கும் இத்தனைக்கும் சொந்தக்காரன் குமார் என்று எல்லோராலும் அழைக்கப் பட்ட கிருஸ்ணகுமார். கிருஸ்ணபிள்ளை மகாமலர் தம்பதிகளுக்கு இரண்டாவது மகனாக *24.05.1967*ல் பிறந்தார். மலர்வதனி,மலர்விழி,பிரதீபன்,மலர்மகள் மற்றும் கிருஸ்ணா ஆகியோர் இவரின் உடன் பிறந்தவர்கள் ஆவர். சிறு வயது முதல் சுறுசுறுப்பாகவும் துடுக்குத்தனம் மிக்கவராகவும் வளர்ந்தார். வதிரி வட்டுவத்தை தமிழ்மன்ற பாலர் பாடசாலையில் புஸ்பராணி ஆசிரியையின் வழிநடத்தலில் ஆரம்பித்த கற்றல் செயற்பாடுகள் பின் யா/தேவரையாளி இந்துக் கல்லூயில் க.பொ.த.(சாதாரணம்) வரை தொடர்ந்தது. துடுப்பாட்டம், உதைபந்தாட்டம்,கரப்பந்தாட்டம் மற்றும் மெய்வல்லுனர் போட்டிகள் என்பனவற்றில் சிறப்பாகச் செயற்பட்டவர் எமது மனோகரா அணிக்காகவும் விளையாடியவர். இலங்கை வரலாற்றில் முதற் தடவையாக *83-84* ஆண்டு காலப் பகுதியில் நொச்சியடி வெட்டையில் மின்னொளியில் நடைபெற்ற துடுப் பாட்டப் போட்டியிலும் விளையாடியவர். எம் . எஸ் .

கமலநாதனால் அறிமுகப்படுத்தப்பட்ட வொலி சொக்கர் விளையாட்டின் முதல் அணியிலும் சிறப்பாக விளையாடிய சிறப்புக்குரியவர். 1987ம் ஆண்டு வட மராட்சியில் அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தங்கியிருந்தவர்களின் மீது இராணுவம் நடாத்திய எறிகணைத் தாக்குதலில் படுகாயமடைந்து மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த வேளை குருதி இழப்பை நிவர்த்தி செய்யும் பொருட்டு தேவரையாளியைச் சேர்ந்த திரு செ.ஜெயக் குமார் அவர்களால் குருதி வழங்கப்பட்டும் சிகிச்சை பலனின்றி 30.05.1987 அன்று 20ஆவது வயதில் காலமானார்.

## செல்வன் தணிகாசலம் தர்மேந்திரா *(1979 - 1987)*



தணிகாசலம் கருணாவதி தம்பதிகளுக்கு 24.11.1979ல் இரண்டாவது மகனாகப் பிறந்தார். தர்சினி இவரின் உடன்பிறந்த சகோதரி ஆவார். சிறுவனாக இருந்தாலும் கட்டுமஸ்தான உடலும் நிமிர்ந்த நடையும் துடுக்குத் தனமும் கொண்டவன். மனோகரா பாலர் பாட சாலையில் கீதாமணி ஆசிரியையின் வழி நடத்தலில் ஆரம்பித்து யா/தேவரையாளி இந்துக் கல்லூரியில் 3ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த தருணத்தில் 1987ம் ஆண்டு வடமராட்சியில் இலங்கை ராணுவத்தால் நடாத்தப்பட்ட விடுதலையாக்கும் நட வடிக்கையில் அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தங்கியிருந்தவர்களின் மீது இராணுவம் நடாத்திய எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டார். இவரோடு மரணித்த இவரது பேத்தியார் செல்லம்மா, சகோதரன் கிருஸ்ணகுமார் மூவரும் அவர்களது குடும்பத்தில் 2வது பிள்ளைகள் ஒரே சம்பவத்திலேயே கொல்லப் பட்டார்கள் என்பது துயரமாகவே அமைந்துவிட்டது.

– கனகசபாபதி செல்வநேசன்

## திருமதி கணேசன் அம்பிகாவதி
## செல்வன் மாசிலாமணி சுதன்



எமது ஊரின் கிழக்கெல்லையாக அமைந்துள்ள கொக்கட்டியாவளவு குறிச்சியில் தாமு-பொன்னம்மா தம்பதியினரின் ஐந்தாவது பிள்ளையாக 18.05.1939 ஆம் ஆண்டு அமரர் அம்பிகாவதி பிறந்தார். திரு வீரசிங்கம்(அதிபர்), அமரர் பேரின்ப நாதன் (பொறியியலாளர்) ஆகியோரை சகோதரர்களாகவும் அமரர்களான சிவபாக்கியம், சிந்தாமணி, தங்கம்மா ஆகியோரையும் மற்றும் தவநாயகி ஆகி யோரின் சகோதரியுமாவார். அல்வாய் வடக்கு கோத்தலாவோடையைச் சேர்ந்த செல்லர் கணேசன் அவர்களை திருமணம் புரிந்து இரண்டு ஆண் பிள்ளைகளையும், நான்கு பெண் பிள்ளைகளையும் பெற்றெடுத்து சீராக வளர்த்து வந்தார். கணவனுக்கு ஏற்பட்ட தீராத நோய் காரணமாக குடும்பம் வறுமையில் வாடியபோதும் தன்னுடைய முயற்சியால் எமது கிராம பெண்களுக்கே உரித்தான தனித்துவமிக்க பாயிழைத்தல் தொழிலின் மூலம் குடும்பத்தை காத்து வந்தார். இன்று எம்மத்தியிலே அருகி வருகின்ற பல பண்புகளை இவர் மிகையாகவே கொண்டிருந்தார். உறவுகளைப் பேணுதல், நன்மை-தீமைகளில் முன்னின்று செயற்படுதல், ஏழ்மை யில் பிறருக்க உதவி செய்வது, விருந்தோம்பலில் மகிழ்வது, வறுமையிலும் செம்மையாக வாழ்வது போன்ற பல பண்புகளையும் ஆன்மிக நாட்டத்தையும் மிக அதிக மாகவே அமரர் அவர்கள் கொண்டிருந்தார். அல்வாய் முத்துமாரி அம்மன் மீது அளவு கடந்த பக்தையாகவும் திகழ்ந்தார். தன்னுடைய சகோதர்கள் போலவே தன் பிள்ளைகளும் கல்வியில் சிறக்க வேண்டு மென்பதற்காக நீண்ட கனவுகளுடன் “பிச்சை புகுனினும் கற்கை நன்றே” என்பதற்கேற்ப மிகுந்த ஆர்வத்துடன் தன் பிள்ளைகளை வளர்த்து வந்தார். ஆனால் யுத்தம் என்னும் கொடிய அரக்கன் இந்த தாயின் கனவுகளை காட்சியாக்க முன்பே பறித்துக் கொண்டான். ஆம், எங்கள் ஊரின் துயரமாய் அமைந்த அந்த 29.05.1987 அன்று அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் எமது உறவுகள் தஞ்சமடைந்திருந்த போது எறிகணை வீச்சில் தனது நாற்பத்தெட்டு வயதில் கொல்லப்பட்டார். இவருடன் இவரது பேரக்குழந்தையான மாசிலாமணி சுதனும் இவரது மடியிலேயே இறந்து போனார். அமரர் கண்ட கனவு பிள்ளைகள் ஊடாக நிறைவேறிய போதும் அதனை அனுபவிக்கும் வாய்ப்பு இல்லாமலே சென்றது துரதிஷ்டமே... இறுதியாக எவ்வளவு தான் நியாயங்கள் கற்பிக்கப்பட்டாலும் யுத்தம் என்பது கொடூரமானதே யுத்தத்தால் உறவுகளை இழந்தவர்களுக்குத்தான் தெரியும் அதன் வலியும் வேதனையும் இளமையில் வறுமையல்ல தாயை இழப்பதே கொடுமையிலும் கொடுமையானது.

– க.தர்மதேவன்

## திருநாவுக்கரசு ஜெயாதரன்



அரியாலை நொத்தரிஸ் வீதியில் வசித்து வந்தவர்களான அமரர்கள் திரு திருமதி திருநாவுக்கரசு புனிதவதி தம்பதிகளின் இரண்டாவது புதல்வன் ஆவான். வயதிற்கு மீறி தோற்றமும் திடகாத்திரமும் கொண்டவன். 26.05.1987 இல் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைக்க சில நாட்களுக்கு முன்னர் எமதூரில் பெரியதாயார் திரு கெங்காதேவி இராசரத்தினம் வீட்டிற்கு வந்திருந்தான். பெரியதாயார் குடும்பத்துடன் பிச்சந்தோட்டம் குறிச்சியில் வெட்டப்பட்ட பதுங்குகுழியில் இருந்தான். பதுங்குகுழியில் இருந்த குழந்தைகளின் அழுகை இராணுவத்தினரின் பார்வையை திசை திருப்பியது. எல்லோரையும் வெளியே அழைத்தவர்கள் ஜெயாதரன் மீது குறி வைத்தனர். எந்த வித கேள்விகளுக்கும் இடமின்றி அவர்கள் முன்னிலை யில் சுட்டு வீழ்த்தினர். இவ்வேளை அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல ஆலடியானை வேண்டி நிற்கிறோம்.

–செல்லக்குட்டி கணேசன்

அது ஒரு காலம் – 4

# தெண்டல் கிட்டியும் பொன்னுத்துரை ஜெயநாதனும்

■ செல்லக்குட்டி கணேசன் ■



அல்வாய் கொக்கட்டியாவளவு குறிச்சியில் வாழ்ந்து வந்தவர்களான இளையவி தெய்வானை தம்பதிகளின் மூன்றாவது புதல்வியாக பிறந்தவர் இராசம்மா. இவர் யாழ்ப்பாணம் கனகரட்ணம் றோட், அரியாலை பகுதியில் வசித்த வந்த சின்னத்தம்பி அவர்களின் புதல்வர் பொன்னுத்துரை அவர்களை மணம் புரிந்து அவ்விடத்திலேயே வாழ்ந்து வந்தார்கள். இல்லற வாழ்வின் பயனாக ஆறு குழந்தைகளைப் பெற்றெடுத்தார்கள். அவர்களில் ஒருவர்தான் பொ.ஜெயநாதன். இவர் இத்தம்பதியிரின் மூன்றாவது புதல்வர் ஆவார்.

இல்லற வாழ்வின் இனிமையை சுவைத்து வாழ்ந்து வந்தவரான திருமதி இராசம்மா அவர்களின் வாழ்வில் இடி விழுந்தாற்போல் 1966 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் , ஐப்பசி வெள்ளி தினத்தன்று அவரது கணவர் சி. பொன்னுத்துரை அவர்கள் காலமானார்.

இதன் பின்னர் தனது பிள்ளைகளுடன் மிகுந்த சிரமத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருந்த திருமதி இராசம்மா 1968 ஆம் ஆண்டு தனது தாய்மனையான கொக்கட்டியாவளவு குறிச்சிக்கு பிள்ளைகளையும் அழைத்து வந்து குடியேறினார். பிள்ளைகளின் கல்வியிலே கவனம் செலுத்திய தாயார் உடனடியாக தமது பிள்ளைகளை யாழ்.தேவரையாளி இந்துக்கல்லூரியில் சேர்த்துக் கொண்டார். ஜெயநாதன் 5ம் வகுப்பிலும் அவரது சகோதரன் விஜயநாதன் 4 ஆம் வகுப்பிலும் இணைந்து கொண்டது இன்றும் என் மனதில் பதிந்துள்ளது. இவர்கள் வந்து சேர்ந்த வீடானது தச்சன் ஒல்லை வெட்டையுடன் இணைந்த பகுதியாகும். இவர்களின் வருகைக்கு முன்னர் இவ்வெட்டையில் குண்டுப்பந்து, கோட்டுப்பந்து, உதைபந்தாட்டம், துடுப்பெடுத்தாட்டம் இன்னும் பல விளையாட்டுக்களை சிறுவர்களாகிய நாங்கள் விளையாடி வந்தோம். இவர்களின் வருகைக்குப் பின்னர் ஜெயநாதனும் அவரது சகோதரன் விஜயநாதனும் இணைந்து எமக்கு கிட்டி அடித்தல் முறையொன்றை அறிமுகப்படுத்தினார்கள். அது தான் தெண்டல் கிட்டியாகும். இதனால் ஜெயநாதன் அவர்களை தெண்டல் கிட்டியின் தந்தையென எமது வயதையொத்தவர்கள் அழைத்து வந்தோம். இன்றும் அழைத்து வருகின்றோம்.

தெண்டல் கிட்டி: இவ் விளையாட்டுக்கென சில விதிகள் உண்டு அவ்விதிகளை அனுசரித்தே விளையாட வேண்டும். இவ்விளையாட்டை விளையாட தேவையானவை ஒரு புள்ளும், கொட்டனுமாகும். புள்ளு 4 அங்குல நீளமுள்ள மத்தள வடிவில் அமைந்ததாகும். கொட்டன் 2 அடிக்கு உட்பட்டதாகும். இக்கொட்டனின் ஒரு முனை புள்ளை குழியில் வைத்து தெண்டுவதற்கு ஏற்ற வகையில் சீவப்பட்டிருக்கும். நேரான சிறிய குழி ஒன்று 3 அல்லது 4 அங்குல நீளத்தில் தோண்டப்படும். அக்குழி மீது கிட்டிப்புள்ளை குறுக்காக வைத்து தெண்ட வேண்டும். குழிக்கு பின்புறமாக அடிப்பதற்கு (தெண்டுவதற்கு) பயன்படுத்தும் கொட்டனின் நீளத்திற்கு ஒப்ப குழியில் இருந்து அளந்து ஒரு கோடு போட வேண்டும். அதேபோன்று குழியின் முன்பக்கமாக குழியில் இருந்து மூன்று அடி தூரத்திற்கு குறுக்காக ஒரு கோடு இடவேண்டும். விளையாடுபவர் இக் கோட்டுக்குள் நின்றே விளையாட வேண்டும்.

துடுப்பாட்டம் போலவே இவ்விளையாட்டிற்கும் சம அளவைக் கொண்ட இரு அணிகள் இருப்பார்கள். ஒரு பகுதியினர் அடிக்கும் போது மற்ற அணியினர் அலைதல் வேண்டும். எந்த அணி முதலில் அடிக்க வேண்டும் அல்லது அலைய வேண்டும் என்பதற்கு பூவா தலையா போட்டுப் பார்த்தே தீர்மானிக்கப்படும். அக்காலத்தில் எங்கள் "பொக்கற்"களில் காசு இருக்காது. சிறிய கல்ஓடு ஒன்றை எடுத்து ஒரு பக்கத்தில் எமது எச்சிலை பூசி மண்ணில் ஒற்ற வைத்து பூவா தலையா போட்டுப் பார்ப்போம்.

இப்பொழுது விளையாட ஆயத்தமாவோம். அலைபவர்கள் குழியில் இருந்து ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் தங்கள் தங்கள் இடங்களில் நிற்பார்கள். அதன் பின்னர் விளையாடுபவர் ஆயத்தமாவார். விளையாடுபவர் முதலில் "புள்ளை" குழியில் குறுக்காக வைத்து தெண்ட வேண்டும். தெண்டும்போது புள்ளை ஏந்தினால் (கச் பிடித்தால்) விளையாடுபவர் "அவுட்" ஆகி விடுவார். அவ்வாறு "கச்" பிடிக்கா விட்டால், விளையாடுபவர் தெண்டிய கொட்டனை குழியின் பின்புற கோட்டிற்கு நேராக வைக்க வேண்டும். அலைபவரில் ஒருவர் அக்கொட்டனுக்கு இலக்கு வைத்து (படும்படியாக) எறிவார். கொட்டனில் "புள்ளு" பட்டால் விளையாடியவர் "அவுட்" ஆகி வெளியே செல்ல வேண்டும். இல்லைஎனில் தொடர்ந்து அவர் விளையாட ஆயத்தமாவார். "புள்ளை" அடிப்பதற்கும் ஒரு விதி உண்டு. "புள்ளை" பெருவிரல், ஆள் காட்டி விரல், நடுவிரல் ஆகிய மூன்று விரல்களாலும் கீழ் நோக்கிப் பிடிக்க வேண்டும். பின்னர் கொட்டனை(தடி) பிடிக்கின்ற கைக்குக் கீழாகக் கொண்டு சென்று "புள்ளு"க்கு வேகமாக அடித்தல் வேண்டும். அடிக்கும் போது "புள்ளை" "கச்" பிடித்தால் விளையாடியவர் "அவுட்" ஆகி செல்ல வேண்டும். இல்லையெனில் "புள்ளு" எந்த இடத்தில் விழுந்திருக்கிறதோ அந்த இடத்தில் நின்று அலைபவர்களில் ஒருவர் அடிப்பவரை நோக்கி எறிய வேண்டும். அவர் அப்புள்ளை அடிக்க வேண்டும். இதனை "மறுத்தான்" என்று சொல்வோம். அவ்வாறு புள்ளை அடிக்காமல் விட்டு "புள்ளு" குழிக்கு அருகில் கொட்டனின் நீள அளவுக்குட்பட்டிருந்தாலும் விளையாடியவர் "அவுட்" ஆகி விடுவார். இல்லை

யெனில் குழியில் இருந்து விளையாடும் கொட்டனால் அளந்து எத்தனை இருக்கிறதோ அவ் எண்ணிக்கை அடிப்பவரின் வங்கிக் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படும். "மறுத்தான்" அடிக்கும் போது "கச்" பிடித்தால் விளையாடியவர் அப்பொழுதும் "அவுட்" ஆகி விடுவார். இல்லையெனில் அவர் திரும்ப திரும்ப மறுத்தான் கேட்டு விளையாடலாம். இல்லையெனில் புள்ளு எவ்வளவு தூரத்தில் இருக்கிறதோ அவ்விடத்தில் இருந்து குழிக்கு நேராக அடிக்கும் கொட்டனால் அளந்து அவ் எண்ணிக்கையும் அவரது வங்கிக் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படும். எண்ணிக்கை மொத்தமாக நூறு வருமானால் ஒரு "Bank" என்று சொல்லுவோம். ஒரு "பாங்"(bank) வந்து விட்டால் ஏற்கனவே விளையாடி ஒருவர் "அவுட்" ஆகியிருந்தால் அவரை எழுப்பிவிடலாம். அதாவது அவர் விளையாடுவதற்கு மீண்டும் தகுதியுடையவராகிறார்.

மறுத்தான் அடித்து "புள்ளு" எந்த இடத்தில் விழுகிறதோ அந்த இடத்தில் இருந்து கொட்டனால் அளக்கும் போது குழிக்கு அண்மையாக அளக்கும் கொட்டனுக்கு அளவாக இல்லையெனில் அத் தூரத்தை விளையாட்டிற்கு பயன்படுத்திய புள்ளால் அளந்து அதனையும் வங்கிக் கணக்கில் சேர்த்துக் கொள்வோம். வங்கியில் சேர்த்துக் கொள்ளப்படும் கணக்கு அணிக்கானது ஆகும். இவ்விளையாட்டை சாதாரணமாகப் பார்க்க முடியாது. இதில் ஆபத்தும் இருக்கிறது. புள்ளை தெண்டும் போது எந்தவித ஆபத்தும் சேர்ந்து விட வாய்ப்பு இல்லை. ஆனால் "மறுத்தான்" விளையாடும் போது சில வேளைகளில் உடலுறுப்புகளில் பட்டு காயங்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்களும் உண்டு.

இவ்விளையாட்டை முதன் முதலில் ஜெயநாதன், விஜயநாதன் ஆகிய இருவருமே தச்சன் ஒல்லை வெட்டையில் அறிமுகப்படுத்தினார்கள். இதனை முதன் முதலில் விளையாடியவர்களாக அவ் அயலைச் சுற்றியுள்ள சிறுவர்களாகிய ம.ரவீந்திரன், வி.விஜயராசா, தி.செல்வநாதன், ந.செல்வரத்தினம் (அரி), வி.சுந்தரலிங்கம், செ.கணேசன், ம.கமலநாதன், வீ.செல்வநாதன், வீ.விஸ்வநாதன் மற்றும் எங்களுக்கு மூத்தவர்களான மா.கருணாநிதி, மா.நகுலேஸ்வரன், மா.கலாநிதி, க.பாலகிருஷ்ணன் ஆகியோராவார். இவ் விளையாட்டானது பின்னர் படிப்படி யாக எல்லா வெட்டைகளிலும் விளையாடப்பட்டாலும், உலக்கந் தோட்டம் வெட்டையே இவ்விளையாட்டுக்கு பிரபல்யம் வாய்ந்த இடமாக அமைந்திருந்தது. ✦

# ஆலடியானும் ஆலமரமும்



வடமராட்சியில் பிரசித்திபெற்றிருந்த அல்வாய் அண்ணமார் ஆலயம் தொன்மையானது. இந்த ஆலயத்தில் ஒவ்வொரு வருடமும் குறித்த ஒரு தினத்தில் அண்ணமார் வேள்வி நடைபெறும். நேர்த்திக்காக வளர்க்கப்பட்டிருந்த ஆடுகளும் கோழிகளும் இவ்வேள்வியில் பலியிடப்படும். இது எமது மக்களின் அந்நாளைய வழிபாடாக இருந்தது. எமது ஊர் எல்லையிலுள்ள "அல்வாய் திக்கத்தானொல்லை சாமணந்தறை" என அழைக்கப்பட்ட, ஒரு காணியில் அமைந்திருந்த பெரிய ஆலமரநிழலின் கீழ் நிறுத்தப்பட்டிருந்த இரு சூலங்கள் அண்ணமார்,காளி என்ற நாமங்களில் வணங்கப்பட்டுக் கொண்டிருந்தன. அண்ணமார் ஆலயத்தைப் போலவே ஆலமரமும் மிகவும் பழமையானது.

நாளடைவில், அண்ணமார் ஆலயத்துக்குப் பக்கத்தே அமைந்த ஒரு சிறு கொட்டிலில் மண்ணினாலான விநாயகர் பொம்மையொன்று வைக்கப்பட்டு வழிபடப்பட்டு வந்தது. விநாயகர் வழிபாட்டில் ஊரவர் பலரும் அதிக அக்கறை காட்டி வேளையில், விநாயகர் ஆலயத்தை நல்லமுறையில் பரிபாலனம் செய்ய வேண்டுமென எமது ஊரவர் விரும்பினர். **1943** ஆம் ஆண்டில் இதற்காகப் பரிபாலனசபை ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து, அச்சபைக்கு "அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயிற் பரிபாலன சபை" என்ற பெயரையும் இட்டனர். சடைத்துப் பரந்து வளர்ந்திருந்த ஆலமரச் சூழலில் அமைந்திருந்த பிள்ளையாரை "ஆலடியானே" என்று அழைத்து எம்மவர் வழிபடத் தொடங்கினர். ஆலடியான் அடியார்க்கெளியராய் அருள்பாலித்து வந்தார்.

கால ஓட்டத்தில் ஆலயக்கட்டடம் அமைத்து மூலஸ்தானத்தில் பொம்மைப் பிள்ளையாருக்குப் பதிலாக கருங்கல்லினாலான "பாலகணபதி" விக்கிரகம் பிரதிட்டை செய்யப்பட்டது. இன்னும் சில காலம் செல்ல, ஆகம விதிப்படி ஆலயக் கட்டடங்களை விஸ்தரிக்க வேண்டி வந்தபோது அலமரத்தை வெட்ட வேண்டிய தேவை ஏற்பட்டது. ஆனாலும், அடியார்கள் எல்லோரும் பிள்ளையாரை "ஆலடியான்" என்று அழைக்கும் வழமை தொடர்ந்தது. ஆலமரம் இல்லாத நிலைமை எம்மவருக்கு உறுத்தலாக இல்லாமல் இல்லை. இந்நிலையில் ஆலமரம் வெட்டப்பட்டு ஒரு சில வருடங்களில் திரு வ.வேலாயுதம் அவர்கள் **1965** இல் தனது மகன் ஜெகதீஸ்வரன் பிறந்தவேளை ஆலமரம் ஒன்றை ஆலயத்தின் முன்னால் நாட்டினார். அது இன்று நன்கு வளர்ந்து. பெருத்து ஆலடியான் என்ற பெயருக்கு விளக்கம் தந்து கொண்டிருக்கிறது. ஏறத்தாழ **56** வருடங்களே ஆன இந்த ஆலமரமே தொன்மையானதாகத் தோன்றுகையில், ஆரம்ப கால ஆலமரம் முந்நூறு வருடங்களுக்கும் மேலாக பழைமையானதாகவே இருந்திருக்க வேண்டும். ✦

**- கலாநிதி த.கலாமணி**

## 2020 நடைபெற்ற க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று எமது ஊருக்கு பெருமை சேர்த்தோர்



சந்திரராசா நிதுர்ஷன் விஞ்ஞானப்பிரிவில் கற்று 2AB பெறுபேற்றினை பெற்று மருத்துவ பீடத்துக்கு தெரிவாகியுள்ளார்.



யோகரத்தினம் வைஷ்ணவி கலைப்பிரிவில் கற்று 3 A பெறுபேற்றினை பெற்று கலைப் பீடத்துக்கு தெரிவாகியுள்ளார்.



சிறீரங்கநாதன் சிறீவிஷ்ணுயா கலைப் பிரிவில் கற்று ABC பெறுபேற்றினை பெற்று கலைப்பீடத்துக்கு தெரிவாகியுள்ளார்.



பூர்ணானந்தன் ஆதிகன் கலைப்பிரிவில் கற்று 3B பெறுபேற்றினை பெற்று கலைப் பீடத்துக்கு தெரிவாகியுள்ளார்.



முகுந்தன் மதுராந்தகி கலைப்பிரிவில் கற்று A2C பெறுபேற்றினை பெற்று கலைப் பீடத்துக்கு தெரிவாகியுள்ளார்.



திலீபன் விஷ்ணுதரன் கணிதப்பிரிவில் கற்று C2S பெறுபேற்றினை பெற்று பல்கலைக்கழக தகுதி பெற்றுள்ளார்

## வெற்றிடத்தின் இருப்பு

பொய்ப்பிக்க முடியாதவை
மெய்ப்பிக்கப்பட்டன
பொய்ப்பிக்க முடியுமென்று
ஐயாறு வருடத்தில்
இனத்தின் எழுச்சியும்,
வீழ்ச்சியும்
நாம்,
சம தொடைகளாய்...
உப தொடைகளாய்..
வெற்றுத்தொடைகளானோம்
அவர்களோ,
அகிலத் தொடையாயினர்
தர்மத்தில் அகரம் சேர்ந்ததா?
அன்றேல் நீங்கியதா?
எது எங்கே நிகழ்ந்தது
தேவரும் அசுரரும்
குருதிகுடிப்பில்
போட்டியிட்டனர்
விடம் தலைக்கேறும் வரை
பரமசிவனும்
தடுக்கவில்லை
பாவிகளை மீட்க,
பிதாவும் சுதனை
அனுப்பவில்லை
ஊழிக்கூத்து முடிந்தது...?
இப்போது
வெற்றுத்தொடையின்
இருப்பிற்காய்
எத்தனையோ
விண்ணப்பங்கள்
இருப்பின்றி தொடர்கிறது
எம் வாழ்வு.

- க.தர்மதேவன்

## கதிரை மோகம்

குதிரை வேகம் கொண்டு
குடிசை தேடிவந்த காலம் எங்கே?
கதிரை ஏறி விட்டதனால்(இன்று)
கதறி அழும் எங்கள் உறவுகளின்
கண்ணீருக்கு உங்கள் முடிவும் எங்கே?

எங்கள் வாக்கில் மன்றம் சென்ற மானிடரே
உங்கள் நெஞ்சில் என்றும் பதவி மோகம்
விலைமதிப்பற்ற வாகனத்தில்
வீதி உலா வரும் விற்பன்னர்களே
நாதி அற்று நடுவீதியில் வந்து பேராடும்
எம்மவர்க்கு நீதி தரமாட்டீரோ?

பிரசார மேடை எறி
பீரங்கி போல் முழங்கியவர் நீங்கள்
விடுதலை வித்தக்களின்
வீரத்தைக் கூறி வெற்றியும் கண்டவர்கள்
கெடுதலை செய்தவரோடு கைகோர்த்து
கடுகதியாய் விரையம் கன்னியவான்களே
விடுபட்டுப் போகாது என்றும் உங்கள்
கதிரை மோகம்.

- தமிழ்மோகன் யோகேஸ்வரன்(தமிழ்யோகி)

## வெளியார் பாடல்

ஐயா தர்மவான்களே!
நாங்கள் தினமும் காலையில் நீராடுகிறோம்.
மூன்று வேளையும் கைகால் அலம்புகிறோம்.
கைநகங்களையும் சுத்தமாக்கி வைத்திருக்கிறோம்.
காலையில் உங்களைப் போலத்தான் குந்தி எழும்புகிறோம்.
தினமும் உடைகளை மாற்றுகிறோம்.
மூன்று வேளையும் உண்கிறோம்.
நீராகாரமும் பருகுகிறோம்.
வீதியிலும் கைகளை வீசி
இரண்டு கால்களாலும் நடக்கிறோம்.
நீங்கள் சுவாசிக்கும் காற்றைத்தான்
நாங்களும் சுவாசிக்கிறோம்.
வைத்தியரும்கூட எங்கள் உடலில் ஓடுவது
சிவப்பு இரத்தம் என்றுதான் சொன்னார்.
அப்படியிருக்கும்போது...
நாங்களும் மனிதர்கள் தானே!

- துவாரகன் (சு.குணேஸ்வரன்)

## விண்மீன்கள்

நிலாக்கதாநாயகியை
புடைசூழவரும்
தோழிகள்
மேகப்படலத்தின்
மேல்
கொட்டப்பட்டு
இரவில் ஒளியை
ஈந்திடும்
ஒளிப்பொட்டுகள்
காலைச் சிதறலில்
காணாமல்
போகின்ற
கண்ணாடித்துகள்

- அல்வைத்தணி உமா